முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | ௯–10–௫௨ வெள்ளி | ஒலி: 24



"டெல்லியிடம் அதிகம[illegible]ப் பணம் வாங்கி என்ன பலன்? அதை செலவழிக்கத் தென்னாட்டில் திட்டங்கள் கிடையாதே!"
என்று குறைபட்டுக் கொண்டார், நிதியமைச்சர் சுப்ரமணியம்!

உடல் வலி—தலை வலி—கை கால் குடைச்சல் — ஒரே நோக்காடு கொண்ட நிலை!

— இது காங்கிரசின் நேற்றைய வரலாறு!

ஜன்னி — அதன் உச்ச கட்டமாகிய பித்து — வாதம் — குஷ்டரோகம் — உள்ளும் புறமும் ரணம் — அடிக்கடி வாந்தி பேதி — நோயாளி நிலை!

— இது காங்கிரசின் இன்றைய வரலாறு!

பச்சை மூங்கில் — வைக்கோல் மெத்தை — வாய்க்கரிசி — கைக் கட்டு — கால் கட்டு — கோடித் துணி — சங்கு — சேகண்டி — இவையெல்லாம் 'தேவைப்படும்' பிணமான நிலை!

— இது காங்கிரசின் நாளைய வரலாறு!

இதற்கிடையேதான் ஆண்டுக்கு ஒரு முறை அந்த நோயாளியை நிமிர்த்தி உட்கார வைத்து, 'முதுமை நாற்றம்' போக பன்னீரில் குளிப்பாட்டி, பட்டாடை உடுத்து கொண்டாட வைக்கிறார்கள், நோயாளியை

வடக்கு வளர்கிறது

காட்டாறு தன் ஓட்டத்தை மறந்தாலும், கடல் அலைவீச மறந்தாலும், சூரியன் உதிக்கத் தவறினாலும், தாமரை மலர மறுத்தாலும், அல்லி விரிந்தே கிடந்தாலும் வடக்கு வளர்வது மாத்திரம் நிற்பதேயில்லை. நாளொரு ஆலையும், பொழுதொரு தொழிலுமாக வடஇந்தியா வளம்பெற்று வருகிறது. மாறாக, தென்னகம் தேய்ந்து வருகிறது. கடந்த வாரத்தில் வடக்கு வளர்ந்த கதை இதோ:—

- ஆசியாவிலேயே எஃகுத்தகடு தயாரிக்கும் மிகப்பெரிய ஆலை ரூர்கேலாவில் அமைக்கப்படும்.
- வடநாட்டிலிருந்து நிலக்கரி ஏற்றுமதி திங்கள் தோறும் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. முந்திய திங்களைவிட ஆகஸ்டு திங்களில் 551 வாகின் அதிகமாக வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறது.
- வடநாட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி சக்தியைப் பெருக்குவதற்கு உருக்கு வார்ப்பட சாலையொன்று சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலையில் நிறுவப்படுமாம்!
- 10—கோடி ரூபாய் செலவில் எஃகு கலப்புத் தொழிற்சாலையும் வடநாட்டில் அமைய இருக்கிறதாம்!

அக் கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு சோஷலிசத்தை நாடி ஓடுகிறார்கள்!

ஓடுவது தப்பில்லை; ஓடுகிற வேகத்தில் அவர்களுக்கு உயிரளிக்கும் காந்தியத்தின் கணக்கைத் தீர்த்துவிட்டு ஓடுகிறார்கள்!

தொழிற் கொள்கைகள்தான் என்ன? அதிலும் குழப்பங்கள்! இடத்திற்குத் தகுந்தபடி பேசி மக்களை ஏமாற்றிடும் சாகசம் தான் இவர்களின் கொள்கை!

பண்டித நேரு பேசுவார் 'கனரகத் தொழில்கள் இந்நாட்டிற்குத் தேவை. அது இல்லாவிட்டால் வெளி நாடுகளுடன் நாம் போட்டியிடமுடியாது!'— என்று! பேசுமிடம், பெருந்தொழிற்சாலை யொன்றில்! 'மேல்நாடுகளைப் போல், கனரக யந்திரங்களில் நம் நாடு முன்னேறியிருப்பது துரதிர்ஷ்டமாகும்!' — என்று சென்னை 'தொழில்' அமைச்சர் திரு. வெங்கட்டராமன், கைத்தொழில் கண்காட்சிக்கான செய்தியில் கூறுவார்.

காந்திஜெயந்தி கொண்டாடும் கனவான்களே! கவனம்! கவனம்!

ஆரம்ப காலத்தில் காப்பாற்றிய ஒரு உத்தமரை நினைவிற் கொண்ட திருநாளை!

ஆம்; காந்தியார் பிறந்த தின விழாவை காங்கிரசார் கொண்டாடுகின்றனர், கோலாகலமாக! அதிலே அமைச்சர்கள் மக்களுக்குத் 'தரிசனம்' தரவாய்ப்பும், மக்கள் அமைச்சர்களைப் 'பார்க்கும்' வாய்ப்பும் கிட்டுவதோடு மட்டுமல்ல; இறந்து போன காந்தியாரின் பெயரை உரக்கக் கூவி, நோய்பட்ட காங்கிரசின் செல்வாக்கை மீண்டும் சரியாக்க நினைக்கிறார்கள்!

ஆனால் மக்களுக்குத் தெரியும், இவர்கள் காந்தி ஜெயந்தி கொண்டாடுவது காந்தியாரின் கொள்கைகளைப் பரப்ப அல்ல!— என்பது!

எழுந்து நடக்க முடியாமல் நாடி விழுந்து கிடக்கிற காங்கிரசின் பெயரை மக்கள் மத்தியிலே உலவவிடும் அரசியற் கண்ணோட்டமுள்ள செயல்தான் காந்தி ஜெயந்தி!

எதிர்க்கட்சிகளைத் திட்டுவதற்குக் கிடைத்த நல்ல வாய்ப்புத்தான் காந்தி ஜெயந்தி!

அடுத்துவரும் தேர்தலுக்கு முன் 'காங்கிரஸ் என்றோர் கட்சியுண்டு; காசு பணம் மிகுந்த கட்சி அது!'—என்று காட்டிடத்தான் 'கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது இந்தக் காந்தி ஜெயந்தி!

இவர்கள் என்னதான் காந்தி ஜெயந்தி கொண்டாடினாலும் 'காந்தியின் கொள்ளுப்பேரர்கள் நாங்கள்'—என்று கூவிக் கொண்டாலும் கேட்பாரில்லை; இவர்கள் மொழியை வேட்பாரில்லை!

நாட்டுக்குத் தெரியும், அந்த நல்லவரின்—நீதி காத்தவரின்—காந்தியாரின் பெயர் சொல்ல இவர்களுக்கு உரிமையுண்டா— என்பது! ஒவ்வொரு செயலிலும் இவர்கள் காந்தியத்தின் கழுத்திலே கத்தியைப் பாய்ச்சுகின்ற செயலைத்தான் செய்து வருகிறார்கள்!

* முதலில் காந்தி ஜெயந்தி என்ற பெயரே தவறுடையது. காரணம், காந்தியடிகளே வெறுத்த பெயர் அது. "அப்படியொரு திருநாள், இந்நாளில் வேண்டுமென்றால், தனி மனிதனைக் குறிப்பிட்டுக் கொண்டாடாமல் (சர்க்கா ஜெயந்தி) ராட்டைத் திருவிழாவாகக் கொண்டாடுங்கள்'— என்று கேட்டுக்கொண்டார், காந்தியார்!

செய்தார்களா, இவர்கள்? காந்தியார் சொற்படி நடந்தார்களா? 'காந்தி பெயர்தான் ஊருக்குத் தெரியும்; அதைச்சொன்னால்தான் ஓட்டு விழும்' — என்பதற்காக காந்தியாரின்வேண்டுகோளையே குப்பைக்குழியில் தூக்கிப்போட்டு விட்டார்கள். ஒருவேளை, 'சர்க்கா ஜெயந்தி''—என்பதைச் சொல்லத் தெரியாதவர்கள் சொல்லி அது 'சர்க்கார் ஜெயந்தி'யாக மாறி, அதை எதிர்க்கட்சிக்காரர்கள் கிண்டல் செய்வார்களே என்ற பயத்தால் 'காந்தி ஜெயந்தி' — என்றே கூறுகிறார்களோ—என்னவோ, பாவம்!

* 'காந்தியம் வாழ்க!'—என்று கூறுகிறார்கள், காந்தி ஜெயந்தியிலே! 'இந்த நல்ல தத்துவத்திற்கு எதிர்க்கட்சிகள் சில ஆதரவு தர மறுக்கின்றனவே!'— என்று சலிப்படைந்து கொள்கிறார்கள்.

ஆனால் அவர்களில் பெரும்பாலோருக்குக் காந்தியம் என்பதன் பொருள் தெரியுமா?–தெரியாது! அதைத் தெரியாமலேயே — அதைத் தெரிந்துகொள்ள விருப்பம் இல்லாமலேயே 'வாழ்க!'— எனக் கூவுகிறார்கள்!

காந்தியம்என்பது தனி வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கக் கோட்பாடுகளையும், நீதி நியமங்களையும் பொது வாழ்விற்கு—அரசியல் வாழ்விற்கு உரியதாக்க வேண்டும்—எனக் கூறுகின்ற தத்துவமே!

இத்தகைய தத்துவங்கள் சிறிதளவேனும் காங்கிரசார் ஆட்சி அரசியல் வாழ்க்கையில் இருக்கிறதா?

எத்தனை துப்பாக்கிப் பிரயோகங்கள்? ஏழை எளியவர் மீது எத்தனை பொய்க் குற்றச்சாட்டுகள்? காங்கிரசாரே சிலபல அரசியல் கொலைகளின் சூத்திரதாரிகளாய் இருக்கிற நிலைமை!

இவர்களின் கொடுமை தாங்காது கதறியழுவோர், கண்ணீர் விடுவோர், காளைப் பருவத்திலேயே தற்கொலையை அணைத்துக் கொண்டோர் எத்தனையோ பேர்!

காந்தியத்தைக் கொலை புரிந்ததால் ரத்தம் சொட்டுகின்ற அதே கரங்களைத் தூக்கி 'காந்தியம் வாழ்க!' என்று கூறுகின்ற நிலைமையும் காணுகிறோம்.

*'காந்தி சொன்ன வழி நடப்பவர்'—என்று மார்தட்டுபவர்கள், அவர் சொன்ன பொருளாதாரப் பாதையைத்தான் ஏற்றுக் கொண்டார்களா?

இல்லை! அவர் சொன்ன 'தர்ம கர்த்தாப் பொருளாதார கொள்கை'யின் கதி என்னவென்று அவர்களுக்கே தெரியாது! அந்தக் கொள்கையை தி. மு. க. உள்ளிட்ட முற்போக்குக் கட்சிகள் ஒத்துக்கொள்ளாமல், 'சோஷலிச உணர்வை'ப் பரப்பிவிட்டதன் காரணமாக காங்கிரசார், 'காந்தியக் கொள்கை போனாலும் பரவாயில்லை! சோஷலிச முறை வேண்டும்!'—என்று மக்களின் போக்கிற்கேற்றபடி குரலை மாற்றிக் கொண்டார்கள்!

'பணக்காரனிடமே சொத்துகள் இருக்கட்டும். அவன் தர்ம கர்த்தாவைப்போல் ஏழைகளுக்கு உதவட்டும்!' — என்ற

இப்படி ஆளுக்கு ஒரு தொழிற் கொள்கை! குழப்பம்! காந்தியத்தை அலட்சியப்படுத்திய காதை!

இம்மட்டோ, இவர்கள் இந்த ஆண்டு காந்திஜெயந்தியைக் கொண்டாடும்போது நமக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

'காந்தியார் பிறந்த நாளில் கலந்து கொள்வதில் தவறில்லை; வாருங்கள் எதிர்க்கட்சியினரே!'— என்று அழைக்கிறார் நிதியமைச்சர்!

அதே நேரத்தில் 'இது காந்தி பிறந்த நாளல்ல; கதர்க் கொள்கையைப் பாராட்டும் நாள்!'— என்ற அறிக்கை வருகிறது!

காங்கிரசார் பேசும் காந்தி ஜெயந்தி விழாவில் பறப்பது காங்கிரஸ் கொடி! பாடுவது எதிர்க்கட்சிகளின்மேல் வசை புராணம்! — இத்தகைய சூழல்களில் எதிர்க்கட்சிகளே வாரீர் என்றழைப்போர் மாசுமருவற்ற உள்ளத்தினரா? — காந்தியம் காட்டுகின்ற வெள்ளையுள்ளத்தைப் படைத்தவரா? — என்ற ஐயம் எழுகிறது!

பொதுவாக, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இவர்கள் காந்தியாரின் பெயரைச் சொல்ல இலாயக்கற்றவர்கள்!

அவர்களின் வழி வந்தோர் எனக் கூறிட ஒரு துளியோக்கியதாம்சமும் இல்லாதவர்கள்!

இன்னும் சொல்லப்போனால் —இவர்களுடைய செல்லரித்த சரித்திரத்தைத் திருப்பிப் புரட்டினால் காந்தியத்தைப் பிரேதக் குழிக்கு அனுப்பியவர்கள் — அக் கொள்கையின் சிறு பூண்டு இந்தப் பூமியிலே முளைத்திடாதபடி வெட்டியெறிந்தவர்கள இவர்கள்தான் — என்க் காலம் தீர்ப்புக் கூறப்போகிறது!

— அடியார்

வெள்ளி 9—10—59 சென்னை

தில்லையிலே சந்திக்கும் தூய்மையும், துரோகமும்!

பதவிக்கு ஏற்படும் போட்டிக்கு இரண்டு விதமான விளக்கங்கள் உண்டு, பொதுவாழ்வு அகராதியில்.

தொண்டு செய்யவேண்டும் என்ற தணியாத அவாவுடன் அதற்கு வழி செய்து கொடுக்கும் பதவியைத் தூய நெஞ்சங்கள் நாடுதல் ஒரு ரகம்; மற்றதோ பதவித் தேனிலே ஈக்களாக மொய்த்து, கிடைக்கும் வரை ருசிக்கும் கடைத்தரப் பண்பு!

இந்த இரண்டு சக்திக்குமிடையேதான் உலகிலே நீண்ட நெடுங் காலமாக ஓயாத போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது! தங்களை நாடி வருகின்றவர்களை மனத்தராசிலே எடைபோட மக்கள் மன்றம் தவறிவிடுகிற முறையால் — நம்பமுடியா ஏமாற்று மொழிகளிலே மனதைப் பறிகொடுத்துவிடுகிற காரணத்தால், பெரும்பான்மையாக துரோகமே வெற்றிவாகை சூடிக்கொண்டிருக்கிறது! நேரம் பார்த்து—நேத்திரம் திறந்து தூய்மை காத்துக்கொண்டே இருக்கிறது!

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தூய்மைக்கும் துரோகத்திற்கும் இடையே நடைபெறுகின்ற இந்தப் போராட்டம், நல்லவர் நெஞ்சங்கள் குளிரத்தக்க அளவுக்கு முடிவு பெற்றிருப்பதைக் கண்டு வருகிறோம். தலைநகரத் தேர்தல், தரம் கொண்டவர்களுக்கு மக்கள் மனதிலே இடமுண்டு; அதனால் ஆட்சி மன்றத்திலும் நிச்சயம் இடமுண்டு—என்ற உண்மையை எடுத்துக் காட்டிவிட்டது!

இப்போது மற்றுமொரு சோதனைக் காலம் நமக்கு முன்னே தோன்றுகிறது!

தில்லை நகரிலே இன்று எழும்பியிருக்கும் தேர்தல் மணியோசை தூங்கிக் கிடந்தோரைத் தட்டி எழுப்பி கூர்த்த விழிகளால் நோக்கச் செய்திருக்கிறது. அந்த இடைத் தேர்தல் முடிவு தூய நல் நெஞ்சு படைத்தவர்களின் தீர்ப்பிலேதான் ஊசலாடிக் கொண்டிருக்கிறது!

தில்லைத் தொகுதி வாக்காளர் பெரு மக்களே! உங்களுக்கு முன்னால் இன்று இரண்டு கரங்கள் நீண்டிருக்கின்றன, உங்களது உள்ளமெனும் இரும்புப் பெட்டியிலே இருக்கின்ற உதிரத்தினும் மேலான வாக்குகளுக்காக!

நன்றாக கவனியுங்கள்; கண்களுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருக்கும் 'மாயத் திரை'களைக் கிழித்தெறியுங்கள், சிந்தனையைக் கொண்டு! அந்த இரு கரங்களையும் உற்று நோக்குங்கள்!

ஒன்றிலே உங்கள் நல்வாழ்வின் கழுத்தை நெறித்துக்கொன்ற இரத்தக் கறையுண்டு! பால் ஓடும் தேன் ஓடும்—என்று பறைசாற்றி, பின்னால் கண்கள் சிந்திய நீரோட பேராறு வெட்டி வைத்த கரம் அது!

மற்றொன்றோ தமிழினத்தைக் கப்பியிருக்கும் சோகக் காரிருளை விரட்ட ஒளிவிளக்கு ஏந்தியுள்ள கரம்! துவண்டு விழுவோரை—துரோகத்தைக் கண்டு மருள்வோரைத் தூக்கி நிறுத்தி—'ஏக்கம் தவிர்ப்பீர்' என்று ஆறுதல் தருகின்ற கரம்!

ஆமாம்; இரண்டு கட்சிகள் வருகின்றன. காங்கிரஸ் வருகிறது—கண்ணிரண்டு பெற்றோரையும் முகத்திரண்டு புண்ணுடையோராக ஆக்கிடுவோம் என்ற கல்லினும் தடித்த நெஞ்சு படைத்தோர் வருகின்றனர். தங்கம் நிகர்த்த உள்ளத்தினர்; நம்மிடையே தங்கிவிட்ட வேதனைக்குத் தனிவீடு கட்டிப் பங்கம் தவிர்த்தோர்; சொந்த நாட்டு வாழ்வுக்காகப் பந்த பாசத்தை உதறித் தள்ளியோரின் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகம் வருகிறது!

இரண்டில் யாருக்கு உங்கள் வாக்கு?

நம்மிடையே பணமில்லைதான்; ஆனாலும் இந்த மண்ணுக்குரியோரை வாழவைக்கும் நல்ல குணமுண்டு! இரும்புப் பெட்டிகள் கிடையாது; அதிலே துருப்பிடித்துக் கிடக்கும் வெள்ளிக்காசுகள் கிடையாது; ஆனால் தள்ளி எழுகின்ற இதயத்து ஆர்வத்தில் நம்மவர் துயர் துடைக்க வேண்டுமென்ற ஆசையுண்டு! கண்ணைக் கட்டியோ கருத்தை மயக்கியோ ஏமாந்த நேரம் கவனத்தை இழுக்கும் ராஜீய தந்திரமல்ல நமது மூலதனம்! தேம்பி அழும் தென்புலத்தோர் எழுப்புகின்ற வேதனைக்குரல் விடுக்கின்ற அழைப்பு — அதை அழித்திட அயராத உழைப்பு — இதுதான் நமது பொதுப்பணியின் குறிக்கோள்! ஆகவே சிந்திப்பீர்; தேர்தல் நேரத்திலே வார்த்தெடுத்த இரும்புச் சிலையினும் கொடிய நெஞ்சு படைத்தோர் விந்தையினும் விந்தையாய் கண்ணீர் விடுவர்; கையேந்துவர்; கடுகளவேனும் சாய்ந்துவிடக்கூடாது துலாக்கோல்!

எனினும் மக்கள் மன்றத்தின் செல்வாக்கை தங்கள் பக்கத்திலே சாய்த்திழுக்க ஆளும் கட்சியினர் பயன்படுத்துகின்ற கருவிகள் ஏராளமாகும்! அதிலே ஒன்றுதான் தில்லைநகரிலே சென்னை அமைச்சர்கள் அடித்திருக்கிற கூடாரமாகும்.

நேற்றுவரை அந்தப்பகுதி மக்களை ஏறெடுத்தும் பார்க்காதவர்கள்—தேர்தலுக்குத் தேர்தல் மட்டுமே தேடிவருகின்ற பண்பில் இன்று சூறாவளி வேகத்திலே சுற்றுப்பயணம் நடத்துகிறார்கள்.

"காங்கிரஸ் ஆட்சியைப் பற்றிக் குறை கூறுபவர்களுக்கு ஓட்டளிக்காதீர்கள்; பனிரெண்டு ஆண்டுகளில் இந்தக் காங்கிரஸ்சர்க்கார் சாதித்தவைகளை எண்ணிப் பாருங்கள்!"—என்று மக்களுக்கு முன்னால் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

எண்ணிப் பாருங்கள் என்றுதான் நாமும் வேண்டுகிறோம்; பனிரெண்டு ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் 'மகத்தான சாதனை'களைக் கண நேரம் சிந்தித்துப் பாருங்கள். யாரால் சாதிக்க முடியும்?

வறுமையால்—வாழ வழி கிடைக்காத காரணத்தால் மரக்கிளையில் மனிதர்களின் உடல்களை ஊசலாட விட்ட பெருமை யாருக்குச் சொந்தம்? ஓடும் நீரிலும், பாழடைந்த கிணறுகளிலும் பயணம் நடத்திய இந்நாட்டு மன்னர்களின் அழுகிப்போன பிணங்களிலிருந்து எழும்பிய 'நறுமண'த்தை நீங்கள் முகர்ந்திருக்கிறீர்களா?

பெற்ற குழந்தைகளை வியாபாரச் சரக்காக்கி வீதி வழியே கூவியலைந்த தாய்மார்கள்; 'தமிழ் நாடு' என்று தான் பிறந்த தரணிக்குப் பெயர் வைக்கப் போராடிப் பிணமாகிப் போனவர்—இவர்களை எல்லாம் வேறு எந்த ஆட்சியிலே சந்தித்திருக்க முடியும்?

ஊதிய உயர்வு தேவை என்று உரிமை முழக்கமிட்டனர், பாட்டாளிப் பெருங்குடியினர். அவர் தம் உதிரத்தைப் பிழிந்தெடுத்து பாரத மாதாவின் சிரித்த முகத்திலே திலகம் இட்டவர்கள் யார்?

அவர்கள்தான்; நம்மை ஆளப்பிறந்தவர்கள் என்று அகந்தை கொண்டலையும் காங்கிரஸ் கட்சியினர்!

இந்தச் சாதனைகளை முன்வைத்து; இன்னும் சாதிப்போம் கோடி கோடி என்று சப்தமிட்டு வருகின்றவர்களுக்கா உங்கள் ஓட்டு? சிந்தியுங்கள்; சீர்தூக்கிப் பாருங்கள்—என்றுதான் வேண்டுகோள் விடுக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்!

தில்லைத்தொகுதி இடைத்தேர்தலைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் இயக்கத்தின் ஆரம்பக் கதையிலேயே அவலப்பகுதி தோன்றிவிட்டது! தேர்தலிலே போட்டியிடுவதற்கென்று ஒருவரைத் தேடி அலைந்து கண்டுபிடித்தார்கள்; 'இவர்தான் காந்தியத் தொண்டர்; கதராடைத் தியாகி' என்று மார்தட்டிக் காண்பித்தனர்.

ஆனால் அந்த நபருடைய தகுதியென்ன; திறமையென்ன? வாக்காளர்களின் சார்பிலே தி. மு. கழகம் அவருடைய பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்தது; புண்ணாகிக் கிடந்த வரலாற்று உண்மைகள் புலப்பட்டன!

தேர்தலிலே போட்டியிடுவதற்கான தகுதியையே இழந்துவிட்டவர் அவர்; 'மூன்றாண்டு காலம் எந்தத் தேர்தலிலேயும் கலந்து கொள்ள முடியாது' என்று சட்டத்தின் துணையுடன் ஒதுக்கிவைக்கப்பட்டவர் அவர், தேர்தல் நிறுவனத்தினால்! மேலும் சென்ற தேர்தலில் காங்கிரசை எதிர்த்தே போட்டியிட்ட புலி! அத்தகைய ஒருவரைத் தேர்ந்தெடுத்த காங்கிரசாரின் தகாத போக்கினை ஆரம்பத்திலேயே எடுத்துக்காட்டிய பின்னர்தான், வேறு ஒருவர் இன்று காங்கிரஸ் வலையிலே விழுந்திருக்கிறார் அதுபோல் அத்தொகுதியிலே வாழுகின்ற ஒரு இலட்சத்து எழுபத்து நான்காயிரம் வாக்காளர்களையும் தன் வலைக்குள்ளே வீழ்த்திவிட முடியும் என்று மனப்பால் குடிக்கின்ற காங்கிரசிற்கு நல்லதொரு பாடமாக இத்தேர்தல் முடிவு விளங்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே உங்களிடம் வருகின்ற தோழர் புலவர் ஆறுமுகம் உழைப்பால் ஓடாகித் தோன்றுபவர்; ஓடோடிப் பணிபுரியும் பேராற்றல் கொண்டவர்; தமிழறிஞர்; தமிழ் காக்கத் தன் தலை கொடுக்கவும் அஞ்சாதவர்!

ஆகவே, அருமைமிகு வாக்காளர்களே! இழி செயல்களும், ஈடில்லாக் குறைகளும் இந்த நாட்டு அரசியலில் இனியும் இருப்பதா; அழிவதா—என்று முடிவு கட்டுங்கள்; நேர்மையின்பால் உங்களுக்குள்ள நாட்டத்தையும், உண்மை ஊழியரைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்குள்ள தனித்திறமையையும் நாடுணரச் செய்யுங்கள்!

தூய்மையை அழையுங்கள்!

துரோகத்தை அழியுங்கள்!



மனிதனின் கதை

பி.சி. கணேசன்

53. அமெரிக்க சுதந்திரப் போர்

அன்புள்ள மாதவி,

ஏழாண்டுப் போரால் பிரிட்டிஷ் கஜானா காலியாகியது. பிரிட்டிஷ் மன்னனான மூன்றாம் ஜார்ஜ், அமெரிக்கக்காலனிகளில் வாழ்ந்த பிரிட்டிஷ் குடிமக்கள் ஏழாண்டுப்போரினால் பெரும் பலன் பெற்றதால், வரிகள் சிலவற்றைத் தாயகத்துக்குத் தர வேண்டுமென்று கட்டளையிட்டான். பக்குவமாக, காரண காரியங்களோடு, வரிவிதிப்புக்கு வேண்டுகோள் விடுத்திருந்தால், அமெரிக்கர்கள் (அமெரிக்கக் காலனிகளில் வாழ்ந்த பிரிட்டிஷ் மக்களை இனி அமெரிக்கர்கள் என அழைப்பதே பொருந்தும்) ஒப்புக்கொண்டு வரிவிதிப்புக்கான சம்மதத்தை மனமுவந்து அளித்திருக்கக்கூடும். ஆனால் மூன்றாம் ஜார்ஜ் மன்னன், பழைய மன்னர்களைப் போல் எதேச்சாதிகாரப் பாதையில், நடைபோட எண்ணினான். பிரிட்டிஷ் மக்களின் நாடியை நன்குணர்ந்த வில்லியம்பிட், இந்த வரி விதிப்பு முறையைப் பலமாகக்கண்டித்து, இந்த முட்டாள்தனம் பிரிட்டிஷ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் என எச்சரித்தார். நிலச்சுவான்தார்கள், பணமூட்டைகள் ஆகியோர் மட்டுமே அடங்கியிருந்த பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மன்னனின் வரிவிதிப்புக்கொள்கைக்குப் பக்கபலமாக நின்றது. மரணப்படுக்கைக்கும் பக்கபலமாக நின்றது. தன் மரணப் படுக்கையிலிருந்து வில்லியம்பிட் விடுத்த வேண்டுகோள்கள் காற்றில் பறக்கவிடப்பட்டன. தங்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறாத பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குத் தங்கள் மீது வரிபோட உரிமையில்லையென அமெரிக்கர்கள் முழங்கினர். பிரிட்டிஷ் மன்னர்களின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து, அமெரிக்காவில்வந்து குடியேறியவர்களின் சந்ததியார்கள் பிரிட்டிஷ் மன்னரின் சர்வாதிகார மனப்பான்மையை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?

சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டுமென்ற ஆசையால் ஆயிரக் கணக்கான மைல்கள் கடலைத் தாண்டி புதிய கண்டத்தில் அவர்களுடைய முன்னோர்கள் குடியேறினார்கள். நாகரிகமற்ற சுதேசிகளான செவ்விந்தியர்களோடு போராடி மரணத்தின் மத்தியில் நாகரிக வாழ்வை அமைத்தார்கள். மனிதர்களே நுழைய முடியாத கானகங்களை அழித்து அழகிய நகரங்களை நிர்மாணித்தார்கள். காட்டாறுகளைக் கட்டுப்படுத்தி பாசன வசதிகளை ஏற்படுத்தினார்கள். கரம்பு நிலங்களைப் பண்படுத்திக் கழனிகளாக்கினார்கள். பாழ்பட்ட பூமியெல்லாம் பணந்தரும் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. சுரங்கங்கள் வெட்டப்பட்டு, பூமியின் அடிவயிற்றில், பதுங்கிக் கிடந்த தங்கப் பாளங்களும் வெள்ளிப்பாளங்களும் வெளியில் கொண்டு வரப்பட்டன. மனிதர்களின் கண்ணுக்குப் படாமல் மறைந்திருந்த கண்டம் ஒரு குபேர உலகமாகவே மாற்றப்பட்டு வந்தது. இப்படி அமெரிக்கக் காலனிகள் செழித்ததால் தாயகமான பிரிட்டன் பெற்ற பலன்கள் ஏராளம். இருந்தும் மூன்றாம் ஜார்ஜ் மன்னனின் அவசர புத்தியும், பார்லிமெண்டின் விவேகமற்ற போக்கும் ஒரு பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்தன. விளைவு....?

அமெரிக்கக் காலனிகள் ஒன்றுபட்டு ஐக்ய அமெரிக்கக் 'குடியரசு என்ற ஒரு நாடு தோன்றி உலகின் ஒப்பற்றதோர் வல்லரசாக வளர்ந்தது!

பிரிட்டிஷ் மன்னனின் வரிவிதிப்பை அமெரிக்கர்கள் முழுமூச்சோடு எதிர்த்தார்கள். 1773-ம் ஆண்டே, தாயகத்தின் போக்கை அமெரிக்கர்கள் எதிர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அமெரிக்கத் தேயிலை வியாபாரத்தைப் பாதிக்கும் வகையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் தேயிலையை அமெரிக்கத் துறைமுகமான பாஸ்டனில் இறக்குமதி செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. தேயிலையை ஏற்றிக்கொண்டு பாஸ்டன் துறைமுகத்தில் நின்ற பிரிட்டிஷ் கப்பலுக்குள் செவ்விந்தியர்கள் போல் வேடம்போட்டுக்கொண்டு அமெரிக்கர்கள் நுழைந்தார்கள். தேயிலை மூட்டைகளை எடுத்துக் கடலில் கொட்டினார்கள். இந்த நிகழ்ச்சியைத்தான் வரலாற்றில் வேடிக்கையாக 'பாஸ்டன் தேநீர் விருந்து' என்று அழைப்பது வழக்கம்.

பிரிட்டிஷ் எதிர்ப்புணர்ச்சி அமெரிக்காவில் வளர்ந்தது. வரி கட்ட மறுத்த அமெரிக்கர்களைப் பணியவைக்க மூன்றாம் ஜார்ஜ் மன்னன் தன் படைகளை அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தான். மூன்று கண்டங்களில் பிரஞ்சுக்காரர்களைத் தோற்கடித்த பிரிட்டிஷ் படை அமெரிக்கர்களை வெகு எளிதில் அடக்கிவிடும் என பிரிட்டிஷ் மன்னன் கனவு கண்டான். ஆனால் நடந்ததோ....!

ஆரம்பத்தில் பிரிட்டிஷ் படை சில போர்களில் வெற்றி பெற்றது. கட்டுப்பாடும் போர்ப் பயிற்சியும் கொண்ட பிரிட்டிஷ் படை தேவைக்காகப் போர்புரிந்த அமெரிக்க சைன்யத்தைவிட மேலாக இருந்தது இயற்கையே. ஆனால் அமெரிக்கர்களின் பிடிவாதமும், உரிமையுணர்ச்சியும் பிரிட்டிஷ் வெற்றியைக் கானல் நீராக்கின. எல்லாவற்றுக்கும் மேலாக இலட்சிய வெறியும் உயர்ந்த ஒழுக்கவுணர்வும் கொண்ட வாஷிங்டன் அமெரிக்கப் படைகளின் தளபதியாகிப் போரை வெற்றிகரமாக நடத்த ஆரம்பித்தார். வெற்றியலை திசைமாறி வீச ஆரம்பித்தது!

1732-ம் ஆண்டு, வர்ஜீனியா என்ற அமெரிக்கக் காலனியில் வாஷிங்டன் பிறந்தார். வாஷிங்டன் பிறப்பதற்கு 150 ஆண்டுகளுக்குமுன் — இங்கிலாந்தில எலிசபெத் மகாராணி ஆண்ட பொழுது—சர் வால்டர் ரலே என்ற பிரிட்டிஷ் கடல் மாலுமி இந்தக் காலனியை ஸ்தாபித்தார். கன்னி ராணியான எலிசபெத்தின் நினைவாக, 'கன்னி' என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லான 'வர்ஜின்' என்ற சொல்லின் அடிப்படையில் வர்ஜீனியா என்று அந்தக் காலனிக்குப் பெயரிட்டார். அங்கிருந்து உருளைக் கிழங்கையும் புகையிலையையும் கொண்டு வந்து ஐரோப்பாக் கண்டத்துக்கு அறிமுகப்படுத்தியவரும் சர் வால்டர் ரலேதான்! இந்த வர்ஜீனியாக் காலனியில்தான் குடியானவர் ஒருவரின் மகனாக வாஷிங்டன் பிறந்தார். நாற்பது வயது வரையில் தன்னுடைய நிலபுலன்களில் புகையிலை பயிரிடுவதில் அவர் தன் பொழுதைக் கழித்து வந்தார். ஏழாண்டுப் போரில் பிரஞ்சுக்காரர்களை எதிர்த்துப் போரிட்டுப் பயிற்சியும் பெற்றிருந்தார். மிஸிஸிபி, ஒஹியோ நதிக்கரையோர நிலங்களை செவ்விந்தியர்களிடமிருந்து ஆக்ரமிப்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. ஏழாண்டுப்போர் முடிந்து செவ்விந்தியர்களோடு மற்றொரு போர் நடத்த பிரிட்டன் விரும்பாததுதான் இதற்குக் காரணம் செவ்விந்தியர்களுடைய நிலங்களை வெள்ளையர் ஆக்ரமிப்பதைத் தடுக்க சட்டங்களும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டன. இதனால் அதிருப்தியடைந்த நிலவுடமைக்காரர்கள் வாஷிங்டனின் தலைமையில் ஒன்றுபட்டனர். 1776-ல் பிரிட்டிஷ் மன்னனுக்கும் அமெரிக்கர்களுக்குமிடையே போர் மூண்டபோது, அமெரிக்கப் படையின் தளபதியாக வாஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் தளபதி பதவி ஏற்க அவர் ஒப்பவில்லை. பிறகு நாட்டின் சூழ்நிலையை எண்ணிப் பதவி ஏற்றார். அப்பொழுது சம்பளம் ஏதும் பெற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். ஒன்றரை ஆண்டுக் காலம் அமெரிக்கப் படைகள் தோல்விமேல் தோல்வி அடைந்தன. வாஷிங்டன் உறுதி தளராமல் படைகளுக்குப் பயிற்சியளித்தார். 1777-லிருந்து, அமெரிக்கர்கள் வெற்றி வாகை சூட ஆரம்பித்தனர். ஏழாண்டுப் போரில் தோல்வியடைந்த பிரஞ்சுக்காரர்கள் பிரிட்டனைப் பழிவாங்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். அமெரிக்கர்களுக்குப் பணமும் தளவாடங்களும் அனுப்பி உதவி செய்தனர். சரடோகாவில் பிரிட்டிஷ் படை அமெரிக்கப் படையால் முற்றுகையிடப்பட்டபோது பிரிட்டிஷ் கப்பல் படையின் உதவி கிடைக்க முடியாமல் பிரஞ்சுக் கப்பல் படை தடுத்ததன் விளைவாக, பசியாலும் தாகத்தாலும் தொல்லைப்பட்டு, பிரிட்டிஷ் படை அமெரிக்கர்களிடம் சரணடைந்தது. பிரிட்டனின் பலம் ஒடுங்கியது. 1783-ம் ஆண்டு, மூன்றாம் ஜார்ஜ் மன்னன் புது இங்கிலாந்து காலனிகளை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார். கானடா, மேற்கிந்தியக் காலனிகள் இப்போரில் ஈடுபடாததால் பிரிட்டிஷ் காலனிகளாகவே இருந்து விட்டன.

1774-ம் ஆண்டில், சிந்திக்கும் அமெரிக்கன் எவனும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பிரிந்து அமெரிக்கா சுதந்திர நாடாவதை விரும்ப மாட்டான் என்று சொன்ன அதே வாஷிங்டனும் அவருடைய நண்பர்களும்தான் 1776-ம் ஆண்டு ஜுலை மாதம் நாலாம் நாள், அமெரிக்கக் காலனி மக்கள் பிரிட்டிஷ் பிரஜைகள் அல்ல எனப் பிரகடனப்படுத்தினர். இந்த நிலைக்கு அவர்களை விரட்டியது பிரிட்டிஷாரின் ராஜதந்திரமற்றப் போக்குத்தான!

பிரிட்டிஷ் மன்னரின் பிரகடனத்தால் பதிமூன்று காலனிகள் சுதந்திர நாடுகளாயின. இந்தப் பதிமூன்று நாடுகளும் எல்லா விஷயங்களிலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுதந்தர நாடாகவே இருக்க முயன்றன, ஒன்றின் போக்கு கண்டு மற்றொன்று பொருமைப்பட்டு, உள்நாட்டுப் போர் ஏற்படும் நிலையும் தோன்றியதுண்டு. வடக்குக் காலனிகளில் பயிர்த்தொழில் செழித்தது. அடிமை வியாபாரம் இல்லை. தெற்கே உள்ள காலனிகளில் பண்ணைகளில் வேலை செய்ய ஆஃபிரிக்காவிலிருந்து நீக்ரோக்கள் அடிமைகளாகப் பிடித்து வரப்பட்டு, சந்தைகளில் கால்நடைகள் போல் விற்கப்பட்டனர். எனவே தெற்கும் வடக்கும் வாழ்க்கை முறையிலும் பொருளியல் அமைப்பிலும் மாறுபட்டே விளங்கின. அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றிப் பின்னர் உனக்கு எழுதுவேன். பதிமூன்று காலனிகளும் 1787-ம் ஆண்டு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி ஒரு மாநாடு கூட்டி ஃபெடரல் அரசாங்க அமைப்பு முறைக்கான ஒரு அரசியல் சட்டத்தை வகுத்தன. உள்நாட்டு விவகாரங்களை அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களே பார்த்துக் கொள்வதென்றும், பாதுகாப்பு, நிதி, போக்குவரத்து சாதனங்கள், சுங்கம், வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு தொடர்புகள் ஆகியவற்றை ஃபெடரல் அரசாங்கம் கவனித்துக் கொள்ளுவதென்றும் முடிவாயிற்று. ராஜ்யங்களின் பிரதிநிதிகள் ஃபெடரல் அரசாங்கத்தை அமைப்பார்கள்: எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதென்றும், குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்குமென்றும் வரையறுக்கப்பட்டது.

மிகவும் பொருத்தமாக, ஜார்ஜ் வாஷிங்டன் ஐக்ய அமெரிக்காவின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருமுறை அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றாம் முறையாக நிற்பதற்கு அவர் மறுத்துவிட்டார். அமெரிக்கக் குடியரசு அமைய அஸ்திவாரமிட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் தாமஸ் பெய்ன், பெஞ்சமின் ஃபிராங்க்லின், பாட்ரிக்ஹென்றி ஆடாம்ஸ், தாமஸ் ஜெஃபர்சன், ஜேம்ஸ் மேடிசன் ஆவர். அன்றிலிருந்து அமெரிக்கக் குடியரசு உலகின செல்வாக்குப் பெற்ற— செல்வமிக்க — நாடாகத் திகழ்ந்து வருகிறது.

அன்புள்ள,

அகத்தியன்.

சிறுகதை

கரை சேருமா?

மாறன் எம். ஏ.

வாழ்க்கையை ஒரு ஆழமான கடலுக்கு ஒப்பிட்டால் அதில் உல்லாசமாக அடிக்கடி தரை நோக்கிப் பிரயாணம் நடத்தும் அலைகள்தான் மாணவப்பருவம்!

எங்கிருந்தோ பணம் வருகிறது; ஆண்டு இறுதியில்தான் தேர்வு — இடைக்காலத்தை எப்படி செலவழிப்பது?

—இந்தக் கேள்விக்குப் பதில் காணமுடியாமல் தவிக்கும் கூட்டத்தில் மிகவும் முக்கியமானவன் ரகுநாதன்.

அதனால்தான் அவன் கால்பந்தாட்டக் கோஷ்டியோடு சேர்ந்து கொண்டு பெங்களூருக்குப் புறப்பட்டான்!

அவனுக்குத் தேர்வைப்பற்றிய கவலை இல்லை. பரிட்சை என்று பயப்படுபவர்களைக் கண்டாலே பிடிக்காது. தேர்வுக்கு முன் எண்ணி ஒரு மாதம் — அது போதும்! அந்த முப்பது நாட்களில் அவன் படிப்பது முன்னூற்றி அறுபத்து ஐந்து நாளும் புத்தகமும் கையுமாகத் திரியும் முதல்தர மாணவர்கள் கூட்டத்தோடு அவனைச் சேர்த்துவிடும்!

அவன் அப்பா வசதியானவர்; அதோடு கருமி. 'கருமியின் பணம் கரைய வேண்டுமானால் அவன் குமாரனைக் கல்லூரிக்கு அனுப்பு' — இது ரகுநாதன் கண்டுபிடித்திருக்கும் புதுமொழி!

"அன்புள்ள அப்பா! நான் 'நவுன்', 'வர்பு'—என்ற இரு புத்தகங்கள் வாங்கவேண்டும்; நூறு ரூபாய் அவசியம் தேவை"—இப்படி ஒரு கடிதம் எழுதுவான். பையனின் அறிவுத் தாகத்தைத் தடைசெய்யக் கூடாதென்று தந்தை பணத்தை உடனே அனுப்பிவிடுவார்.

"அப்பா! எல்லோரும் 'டை' அணிகிறார்கள் என்று எனக்கு அதில் ஒரு அரை டஜன் வாங்கிக் கொடுத்தீர்கள். இப்போது எல்லோரும் 'ஸ்மோக்' செய்கிறார்கள்; நானும் செய்யவேண்டாமா?"

—இப்படி ஒரு கடிதம் பறக்கும்! ஆங்கிலம் தெரியாத அவன் அப்பா, 'ஸ்மோக்கிங்', —'டை' கோட்டு போல ஒரு அணிகலன் என்று நினைத்துக்கொண்டு பணத்தை அனுப்பிவைப்பார்.

இப்படியெல்லாம் அவன் வாங்கிய பணம்தான் இப்போது பெங்களூரில் பல ரூபங்களில் செலவழிந்து கொண்டிருந்தது.

ஒருநாள் மாலை கப்பன் பூங்காவின் மூலையில் எதையோ யோசித்தவாறு உட்கார்ந்துகொண்டிருந்தான் ரகு!

தான் செய்வது சரியா தவறு என்கிற ஆராய்ச்சியில்தான் அவன் எப்போதுமே இறங்குவதில்லையே! ஏனென்றால் அவன் மனம் தவறானதை நாடாது — என்று அவனுக்குள்ளாகவே ஒரு தன்னம்பிக்கை!

அப்படியானால் அவன் தவறு செய்யாமல் இருக்கிறானா? யார் சொன்னது? நிரந்தரமாகச் செய்துகொண்டிருப்பதில்லை; அதோடு தவறு செய்வதாக நினைத்துக்கொண்டும் அதைச் செய்வதில்லை —அவ்வளவுதான்!

மனித மனம் சூரியகாந்தியைப் போலத்தானே! சூரிய ஒளி வரும் திசைக்குக் காம்பு வளைந்து கொடுப்பதைப்போல்; அவன் செய்யும் காரியங்களுக்கேற்ப மனம் ஒவ்வொரு முறையும் ஒரு தத்துவத்தைக் கொடுக்கும்!

—இப்படி அவன் சுயவிமர்சனத்தில் இறங்கியிருக்கும் நேரம் தான் திடீரென்று யாரோ அவன் பின்னாலிருந்து கண்களைப் பொத்தினார்கள்! கையென்றால் என்ன, சாமான்யமான கையா அது? மலர்க்கை !

அந்த ஸ்பரிசம் ஒரு நொடியில் உற்பத்தி செய்த அதிர்ச்சியில் அவன் உயிரற்ற பிணமானான். பின் எப்படியோ உயிரை வரவழைத்துக் கொண்டு எழும்பிக் குதித்தான்.

அவனைக் கண்டதும் அவன் கண் பொத்திய அந்தக் காரிகை, "மன்னிக்கணும்... நான் உங்களை வேற யாரோன்னு நினைச்சி..." —என்று இழுத்தாள்!

"பரவாயில்லை; அதனால் என்ன; வேறு யாரோ என்று நினைத்தே இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருங்களேன்!"

—இப்படி சொல்ல நினைத்தது மனம். வாயோ மூடிக் கிடந்தது.

நாக்கு இயங்குகிறதா—என்ற சந்தேகத்தில் ஒருமுறை அதை அசைத்துப் பார்த்தான். நல்ல வேளை; அது வேலை செய்கிறது!

"மன்னிக்கணும்; நான் வர்றேன்!" — கையெடுத்து வணங்கியவாறு அவள் சென்றுவிட்டாள்.

இதுவரை அவள் பின்னழகைப் பருகிக் கொண்டிருந்தவன் ஏதோ நினைவு வந்தவன்போல,

"நில்லுங்கள்!" — என்று கூச்சல் போட்டான்.

அந்த அழகுத் தேர் நின்றது.

"இந்தக் கைப் பையை வைத்து விட்டுப் போகிறீர்களே!"

"ஓ! மறந்து விட்டேன்; தேங்ஸ்!" — அவள் நகர்ந்தாள்.

ஏதோ ஒரு சக்தி ரகுவைப் பின் தொடரச் செய்தது. "உம்... நீங்கள் எது வரைக்கும் போகிறீர்கள் ?" — துணிந்து கேட்டுவிட்டான்.

"சபாஷ்! மேல் பார்வைக்கு தொடை நடுங்கிபோல இருந்தாலும் இப்போது வெளுத்துக் கட்டி விட்டாயே?" — அவன் மனம் அவனைத் தட்டிக் கொடுத்தது.

"எங்கு போகிறேனென்று கேட்கிறீர்கள்? அதுதான் தெரியவில்லை!"

"உம்...நீங்கள்?"

"நானா? அதுபற்றி யோசிப்பதற்குத்தான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன்!"

"ஓகோ! அப்படியானால் நாம் இருவரும் சினிமாவிற்குப் போனால் என்ன?"

"ஓ, போகலாமே!"

—இருவரும் புறப்பட்டனர்.

ஒரு பெண்ணோடு படத்துக்குப் போனது இதுதான் முதல் தடவை.

படத்திலே கதாநாயகன் ஒரு மூலையில் உட்கார்ந்து மது அருந்திக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெண் அருகில் வந்து உட்கார்ந்து சிரிக்கிறாள்; சேர்ந்து மது அருந்துகிறாள்; "வெளியில் போகலாமா" — என்கிறான் அவன். இருவரும் ஒருவர் நிலையில் ஒட்டியவாறு புறப்படுகின்றனர்.

அதைப் பார்த்ததும்தான் ரகுவுக்குச் சந்தேகம் ஏற்பட்டது; "ஒருவேளை இவளும் அந்த ரகத்தைச் சேர்ந்த பெண்ணாக இருக்குமோ?"

தவறிப்போய் ரகுவின் கை அவள்மீது பட்டது; அவள் அதைத் தடுக்கவில்லை!

* * *

"மோகனா! ஏன்; இன்று நீ 'லிப்ஸ்டிக்' போட்டுக் கொள்ளவில்லையா?"

"உங்கள் வாய்க்குப் பூட்டு போடுவதாகச் சொல்லுங்கள்; இதைப் போட்டுக் கொள்கிறேன்!"

ரகு இடி இடிப்பதுபோல் சிரித்தான். "அது கிடக்கட்டும்; இனிமேல் நீ இந்தக் கறுப்புப் புடவையைத் தொடவே கூடாது."

"பிறகு?"

"இதோ பார்த்தாயா இந்த வெண்பட்டுதான் உன்னை அலங்கரிக்க வேண்டும்!" — என்று அவன் வாங்கிவந்த புடவையைக் கொடுத்தான்.

அவளுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சிதான். "ஆமாம்; பணத்தை இப்படியெல்லாம் செலவழிக்கிறீர்களே; உங்கள் அப்பா கோபித்துக்கொள்ள மாட்டார்களா?"

"ஊஹூம்; கோபித்துக் கொள்ளமாட்டார். நூறு ரூபாய் செலவழித்து 'நவுன்' என்ற புத்தகம் வாங்கி மகன் படிக்கிறானே — என்று மகிழ்ச்சிதான் அடைவார்!"

—இது மறுநாள் அவர்கள் இருவருக்கும் இடையில் நடந்த பேச்சு!

அந்த சந்திப்பு நீண்டது. அதற்கு அடுத்த நாள் ரகு மிகவும் குதூகலத்தோடு 'டாக்சி'யிலிருந்து இறங்கி அவள் வீட்டிற்குச் சென்றான்.

கதவு பூட்டப்பட்டிருந்தது. ரகுவுக்கு ஓரே வியப்பு! அதிலே சொருகப்பட்டிருந்த காகிதத்தை எடுத்தான்.

" அன்புள்ள.......

உங்களை எப்படி அழைப்பதென்றே தெரியவில்லை. உங்களைப் பார்த்தால் நல்ல குடும்பத்தில் பிறந்தவராகத் தெரிகிறது. நானோ கரை சேர முடியாமல் திசைமாறித் தவிக்கும் படகு! இந்தக் கெட்டுப்போனவளை நம்பி நீங்களும் ஏன் கெட்டுப் போகிறீர்கள்? நான் இங்கு இருந்தால் நீங்கள் வருவதைத் தடுக்க முடியாது என்பதற்குத்தான் நான் வீட்டையே காலி செய்து வேறு இடத்திற்குப் போய் விட்டேன். தயவுசெய்து உங்கள் திருமண அழைப்பிதழை எனது பழைய முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அது எப்படியும் எனக்குக் கிடைத்துவிடும். நான் அதுவரை உயிருடன் இருந்தால் உங்களை மணக்கோலத்தில் கண்டு களிக்கிறேன்."

—மோகனா கையெழுத்திட்டிருந்த அந்தக் கடிதத்தைப் படித்ததும் ரகுவுக்குக் கண் கலங்கி விட்டது.

பாவம்; ஒரு குடும்பப் பெண்ணுக்கு இருக்கவேண்டிய எந்தப் பண்பு நலத்திலும் அவள் குறைந்தவள் அல்ல; தான் செய்வது சரியல்ல என்பது தெரிந்திருந்தும் அவள் உடலை விற்க முன்வருவானேன்?

—உலகத்தில் எல்லா நாடுகளிலும் பரவியிருக்கும் இந்த வியாதியைப் பற்றி நினைத்தவாறே ரகு திரும்பினான்!

* * *

ஆண்டுகள் பல உருண்டோடின.

பெங்களூரில் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒருநாள்...

ஒரு ஜீப் கார் வந்து நின்றது. சப் இன்ஸ்பெக்டர் மொய்தீன் வாயிலில் நின்ற போலீஸ்காரனின் 'சல்யூட்'டை வாங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

"இன்றைக்குப் பிடித்ததெல்லாம் எங்கே?"

"உள்ளே இருக்காங்க, சார்!"

"சரி, வரச்சொல்!"

— மொய்தீன் உட்கார்ந்தார். விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் ஒவ்வொருவராகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்.

"சார், சார்! கமிஷனர் வருகிறார்!"—என்று அறிவித்தான், போலீஸ்!

மொய்தீன் எழுந்து உள்ளே வந்த கமிஷனருக்குச் 'சல்யூட்' செய்தார்.

"ஓகோ! இன்று இந்தக் கூட்டமா? ' என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தவாறே கமிஷனர் ஆசனத்தில் அமர்ந்தார். விளையாட்டாக மேஜையிலிருந்த பேனாவை எடுத்துக் கொண்டு,

"உம்.....வரச் சொல்லுங்கள்" என்றார்.

[தொடர்ச்சி பக்கம்—10

20. யார் அந்த ஒற்றன்?

நெடுமாறனையும் காரிக்கண்ணனாரையும் வரவேற்று பயணக் களைப்பு தீர பழச்சாறு வழங்கச் செய்து பாண்டிய நாட்டுத் தளபதியின் நலன்களை விசாரித்து மகிழ்ந்தான் கரிகாலன். மன்னனின் கேள்விகட்கு நெடுமாறன் பதில் அளிக்கும்போது புன்னகையை வரவழைத்துக்கொண்டான் என்றாலும் கரிகால் மன்னனின் கண்கள் அவன் உள்ளத்தில் புயல் இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டன.

"என்ன — இருங்கோவேளைக் கூண்டோடு சிறைப்படுத்தத் திட்டமிட்டுப் போராட்டம் தொடங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி. ஏற்பாடுகள் எல்லாம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டன அல்லவா?"

—என்று பேச்சைத் திருப்பினான் சோழவேந்தன்.

"ஏற்பாடுகள் எல்லாம் வெற்றிகரமாக அமைந்துவிட்டன. எதிரியைச் சந்தடியின்றிப் பிடித்துவிட என்னாலியன்ற எல்லா முறைகளையும் மேற்கொண்டேன், ஆனால் எப்படியோ படையெடுப்பு பற்றி இருங்கோவேளுக்குத் தகவல் போயிருக்கிறது." நெடுமாறன் பேச்சை முடிக்கவில்லை.

அதற்குள் கரிகாலன் குறுக்கிட்டு, "இருங்கோவேளுக்குத் தகவல் போய்விட்டதென்று எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"தகவல் போனதுமட்டுமல்ல தார்வேந்தே! தலைகுனியும் சேதியொன்றும் என் நெஞ்சில் மோதிவிட்டது. எந்தச் செழியனின் விடுதலைக்காக இந்தப்படையெடுப்போ அந்தச் செழியன் இருங்கோவேளின் நண்பனாகிவிட்டான். இதோ பாருங்கள் செழியன் விடுத்துள்ள மடலை! கோழைத்தனமும் துரோக எண்ணமுங்கொண்ட கொடியவன் எழுதியுள்ள மடலைப் படியுங்கள்!"

—என்று ஓலையை எடுத்து அரசனிடம் கொடுத்தான். கரிகாலன் அதைப் படித்துப்பார்த்துவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் நினைப்பு முத்துநகையின் மீது சென்றது. அவள் கூறிய வார்த்தைகள் அவன் காதில் ஒலிக்க ஆரம்பித்தன.

"செழியன், இருங்கோவேளின் நண்பனாகிவிட்டதாகவும் பாண்டிய மன்னன், செழியனைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லையென்றும் செழியனைக் கொண்டே எழுதப்பட்ட ஓலையாகும் அது. முக்கியமாகப் பாண்டியர் படையெடுப்பைத் தடுத்து அவர்களைத் திரும்பிடச் செய்யவே அந்த ஏற்பாடு. நல்ல வேளையாக அந்தச் சூழ்ச்சியில் இருங்கோவேள் வெற்றியடையவில்லை. நான் குறுக்கிட்டு ஓலையைக் கைப்பற்றிவிட்டேன்.

"அந்த ஓலை பாண்டிய நாட்டு ஒற்றர் வீரபாண்டியிடம் இருக்கிறது. அந்த வீரபாண்டி மிகவும் நல்லவர். ஒப்பற்ற வீரர். பாண்டிய நாட்டுக்காகத் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் இருங்கோவேளைச் சுற்றிக்கொண்டு திரிகிறார். படையெடுத்து வரும்படி பாண்டிய நாட்டுக்குத் தகவல் அனுப்பியதே அவர்தானும். பாவம், ஒரு சாதாரண விறகு வெட்டியைப் போல காடு மேடெல்லாம் அலைகிறார். கஷ்டப்படுகிறார். ஆகா... அவரிடம் எவ்வளவு ஆழ்ந்த நாட்டுப்பற்று ஒளிவிடுகிறது தெரியுமா?"

—முத்துநகை உற்சாகத்துடன் கரிகால் மன்னனிடம் பேசிய வாசகத்தை மன்னன் நினைத்து நினைத்துப் பார்த்துப் பெருங் குழப்பமடைந்தான். இருங்கோவேளின் ஆளிடமிருந்து முத்துநகையால் கைப்பற்றப்பட்டு பாண்டிய நாட்டு ஒற்றனிடம் ஒப்படைக்கப்பட்ட ஓலையாகத்தானே இது இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

"இந்த ஓலை உமக்கு எப்படிக் கிடைத்தது. ஒற்றர் வாயிலாகத்தானே?"

—என்று நெடுமாறனைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லைமன்னா! இருங்கோவேளின் ஆளே கொண்டுவந்து கொடுத்தான். கொடுத்தது மட்டுமல்ல; ஒளிந்திருந்து உளவறியவும் தலைப்பட்டான. அவனை சாவூருக்கு அனுப்பிவிட்டுத்தான் இங்கு வருகிறேன் நான்." —என நெடுமாறன் பதில் கூறியதும் சோழனின் உள்ளத்தில் சூறாவளி வீசத் தொடங்கியது. ஒற்றனிடம் முத்துநகை கொடுத்த ஓலை மறுபடியும் இருங்கோவேளின் கைக்கு எப்படி மாறியது? கேள்விக்கணை அவன் இதயத்தைக் குடைந்தது!

"போகட்டும் – அண்மையில் உங்கள் ஒற்றர் வீரபாண்டியிடமிருந்து ஏதாவது அவசரச் செய்திகள் உங்கள் பாசறைக்கு அனுப்பப்பட்டதா?" — என்றான் சோழன்.

"எங்கள் ஒற்றர் வீரபாண்டியா? அரசே! அப்படிப் பெயர் கொண்ட யாரும் எங்கள் நாட்டில் ஒற்றராகவே இல்லையே! தங்களுக்கு யாரோ தவறான தகவல் தந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்." என்று வியப்புடன் பதில் கூறினான் நெடுமாறன்.

சோழனின் தலை கிறுகிறுத்தது. பேச நா எழவில்லை. கண்களை மூடிக்கொண்டு அசைவற்று வெகுநேரம் உட்கார்ந்திருந்தான்.

புலவருக்கு ஒன்றும் புரியவில்லை. அருகே சென்று 'அரசே!' என்று அழைத்தார். தூங்கியவன் விழிப்பது போலத் திடுக்கிட்டு விழித்த கரிகாலன் எழுந்து அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினான்.

வீரபாண்டி என்கின்ற பெயரால் ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று மட்டும் பாண்டிய நாட்டுத் தளபதியால் புரிந்து கொள்ளமுடிந்தது. சோழன் திடீரென்று நின்று தளபதியைப் பார்த்து, "இந்த ஓலையைப் படித்தபிறகு என்ன முடிவுக்கு வந்தீர்கள்?" என்று கேட்டான்.

உடனே தளபதி, "நான் எப்படி முடிவுகளை எடுக்கமுடியும்? பாண்டிய மன்னரைக் கலந்துகொண்ட பிறகே என்னால் எதையும் செய்யமுடியும். அத்துடன் தங்களின் பெருமைமிக்க யோசனைகளையும் பாண்டிய மன்னனிடம் தெரிவிக்க மிக்க ஆவலாக இருக்கிறேன்." என்று பதில் தந்தான்,

சோழன் புருவத்தை உயர்த்தியவாறு, நெடுமாறனைப் பார்த்து, "அப்படியானால்—வீரபாண்டியென்று யாருமே ஒற்றர் உங்கள் நாட்டில் இல்லை?" என்று கவலையோடு கேட்டார்.

"இல்லை வேந்தே, நிச்சயமாக இல்லை! ஏன்? யாராவது அந்தப் பெயருடன் தங்களை வந்து சந்தித்தார்களா?" என்றான் தளபதி.

"இல்லை! இன்னும் சந்திக்கவில்லை.' என்று மெல்லிய குரலில் பதில் அளித்தான் கரிகாலன்.

அதற்குமேல் அதுபற்றிக் கேட்கவேண்டுமென்று நெடுமாறனுக்கும் புலவருக்கும் தோன்றினாலுங்கூட சோழப்பெருவேந்தரிடம் அளவுக்கு மீறிப் பேசியதாக ஆகிவிடுமென்று அஞ்சி நிறுத்திக் கொண்டனர் சோழன் தளபதி நெடுமாறனிடம் நாளைவரையில் பூம்புகாரிலேயே தன் மாளிகையில் தங்கியிருக்குமாறும் அதற்கு மேல் நடக்கவேண்டியவை பற்றி யோசிக்கலாமென்றும் கூறி அவனைத் தனி மாளிகையில் தங்குவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்குமாறு தன் மெய்காப்பாளனிடம் உத்திரவிட்டான். நெடுமாறனும் அரசனிடமும் புலவரிடமும் விடை பெற்றுக்கொண்டு தனி மாளிகை நோக்கி மெய்காப்பாளனைத் தொடர்ந்து சென்றான். புலவர் தன்னிடம் மன்னன் ஏதாவது சொல்லக் கூடுமென்று எதிர்பார்த்து நின்றார்.

"புலவர் அவர்களே! என் ஆட்சிக் காலத்தில் இதுவரை கேள்விப்படாத அதிசயங்களையெல்லாம் இப்போது கேள்விப்படுகிறேன். என்னிடம் தோற்றோடிய அந்த இருங்கோவேள் மன்னனைப் போல சாகாமல் கள்ளனைப்போல வாழ்கிறான்காட்டில் என்றால் தமிழ் நாட்டு வீரத்திற்கே இழுக்கு! வாழட்டும் காட்டில்! வேண்டாமென்று கூறவில்லை நான். நாடுகள் திரும்ப வேண்டுமென்று கேட்கட்டும். தர முடியாது எனக் கூறமாட்டேன் நான். இன்னும் வீராப்பும் வீம்பும் பேசிக்கொண்டு திரிகிறானே; என் வீரத்தை உணராமல்! அது மட்டுமல்ல புலவரே— அவன் சாகசத்தில் வீழ்ந்தோ, சதியில் சிக்கியோ மலர்க்கொடி ஓருத்தியும் தவிக்கிறாள். என் தலையைக் கொய்வது அவ்வளவு

சுலபமென்று கருதியிருக்கிருன் போலும்." என்று கூறிச் சோழன் அலட்சியமாக சிரித்தான்.

புலவர் விழித்தார். "என்ன மன்னவா சொல்கிறீர்கள்? தலையைக் கொய்ய ஏற்பாடா? அதில் ஒரு பெண்ணுக்கும் பங்கா? என்ன சொலகிறீர்கள்? யார் அந்தப் பெண்?" என்று ஆவலோடு கேட்டார்.

"இன்று அல்லது நாளை உண்மையைத் தங்கள் கண் எதிரிலேயே காட்டுகிறேன். தாங்கள் எங்கும் போகாமல் வீட்டிலேயே இருங்கள். நான் அழைத்த நேரத்தில் அரண்மனைக்கு வர வேண்டும். சரிதானு?"

"சரி வேந்தே!"

புலவர் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். சோழன் ஏழடி நடந்து சென்று அவரை வழியனுப்பிவிட்டு ஒரு வீரனைக் கூப்பிட்டு உடனே மெய்காப்பாளனை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். அவனுக்குக்குழப்பம் ஒய்ந்தபாடில்லை. வீரபாண்டி என்கின்ற பெயரால் முத்துநகையுடன் வரப்போகிறவன் யார்? அவன் எதற்காக வருகிருன்? முத்துநகை, அந்த மாயக்காரனிடம் ஏமாந்திருப்பாளா? அல்லது அவளும் இந்த சதிக்கு உடந்தையா? இவ்வினுக்களுக்கு விடை காணுமல் கரிகாலன் தவித்துக் கொண்டிருந்தான்.

★

பாழ்மண்டபத்தில் முத்துநகை, தன் காதலனை அவசரப்படுத்திக் கொண்டிருந்தாள், சோழமன்னனைச் சந்திப்பதற்குப் புறப்படுவதற்காக!

"உன்னையே பார்த்துக் கொண்டு இந்த மண்டபத்தில் உட்கார்ந்திருக்கலாம் போலிருக்கிறது. ஏன் அவசரப்படுத்துகிருய்! இரு, இரு!" எனக் கூறியவாறு அவள் முகத்தைத் தன் முகத்துக்கு நேரே கொண்டு வந்து வைத்த விழி வாங்காமல் சுவைத்துக்கொண்டிருந்தான்.

"நேரமாகிறது அத்தான். வேடத்தைப் போட்டுக் கொள்ளுங்கள். வேந்தர் சொன்ன நேரத்தில் போய்ப் பார்ப்பது தான் நல்லது." —என்று எழுந்தாள் முத்துநகை.

அப்போது, தொலைவில் குதிரைகள் வரும் ஒலி கேட்டு அவள் திடுக்கிட்டாள். அவனுக்கு அந்த ஒலி அதிர்ச்சியைத் தரவில்லை. ஆனாலும் அஞ்சுவதுபோல் நடித்தான.

"முத்தூ! முத்தூ! நீ போய் குதிரைகள் எந்தப் பக்கம் போகின்றன என்று ஒளிந்திருந்து கவனி. அதற்குள் நான் கிழவேடத்தை அணிந்து கொண்டு தயாராகிறேன்." என அவளைப் பரபரப்புக் காட்டி ஓடச்செய்தான் இருங்கோவேள்.

அவளும் பதட்டமடைந்து ஒடிச்சென்று புதர்களின் மறைவில் ஒளிந்து குதிரைகளின் ஒலி வரும் திக்கையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். வெகு தொலைவிலிருந்து குதிரைகள் வருவதாக யூகித்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மூன்று குதிரைகள் அந்தப் பக்கம் வேகமாக வந்தன. அவைகளில் அமர்ந்திருந்தவர்களை யார் என்று அவளால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அவர்கள் அணிந்திருந்த உடைகள் அவர்கள் இருங்கோவேளின் வீரர்கள் என்பதைக் காட்டிக் கொடுத்தன. குதிரையில் இருந்தவர்கள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே "பகை! பகை! பகை!" என்று கத்தினுர்கள். அதற்குள் எங்கிருந்தோ "தூள்! தூள்! தூள்!" என்ற முழக்கம் கிளம்பியது. அந்த முழக்கம் பாழ்மண்டபத்துப் பக்கமிருந்து வந்ததுபோல் தோன்றியது. அவளைத் திகில் சூழ்ந்துகொண்டது. பகைவர்களுக்கிடையே தானும் தன் அத்தானும் சிக்கிக் கொண்டதாக எண்ணிக் கலக்கமடைந்தாள். அவள் மூச்சு நின்றுவிடும்போல் திணறியது.

மூன்று குதிரைகளும் அவள் ஒளிந்திருந்த இடத்துக்கு நேராக நின்று தங்களைத் தாங்களே ஒருமுறை சுற்றிக்கொண்டன. பிறகு குதிரை வீரர்கள் அவைகளை முடுக்கினுர்கள். குதிரைகள் அந்த இடத்தைவிட்டு நாலுகால் பாய்ச்சலில் கிளம்பின. அவைகள் போகும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் முத்துநகை. இருங்கோவேளின் மரமாளிகையை நோக்கித்தான் அவைகள் போகின்றன என்பதைப் புரிந்துகொண்டாள். பாழ்பண்டபத்துக்குத் திரும்பி ஓடிவந்தாள். அவள் முதலில் கண்ட விகார உருவக்கிழவன் நின்றுகொண்டிருந்தான்.

"அத்தான்! நமக்கு ஏதோ ஆபத்து வர இருக்கிறது. குதிரை வீரர்கள் மிக வேகமாக இருங்கோவேள் மாளிகையை நோக்கி ஓடியிருக்கிருர்கள் நாம் இங்கிருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும், நம்மை வளைப்பதற்கு இன்னும் சில வீரர்களோடு வருவதற்காகவே அவர்கள் திரும்பியிருக்க வேண்டும். வாருங்கள் உடனே புகார் நகருக்குப் புறப்படலாம். ...ம்....கிளம்புங்கள்!" என்று அவன் கரம் பற்றி இழுத்தாள், முத்துநகை.

இருவரும் சுற்றுமுற்றும் நடுக்கத்தோடு பார்த்துக்கொண்டே ஓடி வந்து குதிரைகளில் ஏறிக் கொண்டார்கள். இரண்டு குதிரைகளும் சோழன் தலை நகராம் பூம்புகார் நோக்கிப் பறந்தன.

பூம்புகார் தெருக்கள் பல கடந்து கோட்டைக்குள் குதிரைகள் நுழைந்தன. முத்துநகைக்கு அங்கு தடையில்லை. அதனுல் வீரர் எவரும் தடுக்கவில்லை. இருவரும் குதிரைகளை விட்டிறங்கி மன்னன் மாளிகை நோக்கி நடந்தனர். மாளிகை வெளிமுற்றத்தில் மெய்காப்பாளன் நின்று கொண்டிருந்தான் அவன் அவர்கள் இருவரையும் வரவேற்று உள்ளே உட்காரச் சொல்லிவிட்டு, முத்துநகையின் அருகே வந்து, "முதலில் உன்னை மட்டும் அரசர் தனியே பார்க்க விரும்புகிருர். அடுத்து அவரைப் பார்ப்பாராம்." என்ருன்.

உடனே முத்துநகை எழுந்து மெய்காப்பாளனுடன் அரசனைத் தனியே பார்ப்பதற்குச் சென்ருள். அரசன் சின்னஞ்சிறு கூடமொன்றில் ஒரு புலிக்குட்டியின் வாயில் கையை விட்டு விளையாடியவாறு உட்கார்ந்திருந்தான்.

முத்துநகையைக் கண்டதும், "வீரபாண்டியை அழைத்து வந்திருக்கிருயா?" என்று கேட்டான் கரிகாலன்.

"அழைத்து வந்திருக்கிறேன்!" என்று மரியாதையுடன் கூறி நின்ருள் முத்துநகை.

அரசன், மெய்காப்பாளனைப் பார்த்து, "நீ போய், நானும் ஒற்றரும் சந்திக்தும் இடத்தை ஒழுங்குபடுத்திவை போ!" எனச் சொல்லிவிட்டு, "முத்துநகை! நீ இங்கேயே இரு—இதோ வந்து விடுகிறேன்!" எனக் கூறி வெளியே புறப்பட்டான்.

அரசரின் அர்த்தமற்ற பரபரப்புக்கு முத்துநகையினுல் காரணம் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனுல் அந்தப்பரபரப்பு அவள் மனதில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.

வெளியே வந்த வேந்தன், ஒரு வீரனைக் கூப்பிட்டு "உடனே ஓடிச்சென்று புலவர் காரிக் கண்ணனுரை அழைத்துவா!" எனக்கட்டளையிட்டுவிட்டு, எதிரே வந்து வணங்கிய காவற்படைத் தலைவனிடம் கண்டிப்பான குரலில், "என்மாளிகையிலிருந்து என் உத்திரவின்றி யாரும் வெளியேறக்கூடாது. எச்சரிக்கை!" எனக் கூறிவிட்டு மீண்டும் முத்துநகையை உட்காரச் சொன்ன கூடத்திற்குத் திரும்பினுன்.

தொடரும்

சென்னை மாவட்ட
தி. மு. கழக 3-வது மாநாடு

அக்டோபர் 17, 18, சனி, ஞாயிறு (எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்)

தலைவர் : டி. கே. சீனிவாசன்

திறப்பாளர் : இராம. அரங்கண்ணல்

அறிஞர் அண்ணு, பொதுச்செயலாளர்

மற்றும் கழக முன்னணியினர் அளிக்கும் அரசியல் கருத்துக்கள்

சிதம்பரம் செயராமன்
நாகூர் அனிபா
அளிக்கும் இசையமுது

17-ந் தேதி
கலைஞர் மு. கருணுநிதி
நடிக்கும்
"உதயசூரியன்" நாடகம்.

18-ந் தேதி இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராசேந்திரன்
நடிக்கும் நாடகம்.

கலப்படம்

ஆந்திராவில் தி. மு. கழகம்! அமைச்சரே ஆதரவாளர்!!

ஆந்திர முதலமைச்சர் இங்கு ஏன் வந்து தொலைந்தார்?—இது பொதுமக்கள் கேட்கும் கேள்வியல்ல. பொது மக்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு பரிபாலனம் நடத்துகின்ற காமராசர் எழுப்புகின்ற கேள்வி! வந்ததுதான் வந்தார், மற்றவர்களைப்போல ஒழுங்காக, முறையாக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாரா?

* சென்னை வருதல்,

* சென்னை அரசாங்க விருந்தாளியாக இருத்தல்,

* நல்ல சாப்பாடு, நல்ல தூக்கம்—இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல்.

* ஓய்வு நேரத்தில், அடக்கமான இடத்தில் 'பொழுது போக்கு'க்காகப் பேசுதல்!

* அதிலும், 'அகில இந்தியா'வை வலியுறுத்துதல்,

* பஞ்சசீலம் பற்றிப் பறையறைதல்.

* கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்.

* கண்காட்சியைத் திறந்து வைத்தல்.

* இரவில், பரத நாட்டியம், பாட்டுக் கச்சேரி முதலியவை காணல்!

* சுகமான தூக்கம்!

—இப்படி 'சுகானுபவங்'களை அனுபவிக்காது, ஏதேதோ பேசினார் சென்னையில்!

திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மையான இடங்களில் வீற்றிருக்கும் நகராட்சி மன்றத்தின் ஆண்டுவிழாவிலும் தேனாம்பேட்டை கால்நடைக்கண்காட்சியிலும் கலந்துகொண்டார், ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியார்.

மேயர் அரசு பேசினார்; அவருக்கே உரிய மெதுவானகுரலில் பேசினார். கழகத்திற்கே உரிய நல்ல சொற்களைப் பயன்படுத்திக் கனிவாகவும், குழைவாகவும் வேண்டிக் கொண்டார். சென்னை மக்களுக்குக் குடி நீர் வழங்க ஆந்திரம் முன்வர வேண்டுமென்று!

"முடியாது! ஆந்திரத்திலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட சென்னைக்குக் கிடையாது. பிரிவினைவாதிகள் பதவியில் உட்கார்ந்திருக்கும் இந்தப் 'பாவ நக'ருக்குத் தண்ணீர் தரமுடியாது!"—என்று சஞ்சீவி ரெட்டியார் கூறியிருந்தால்........ஆகா! காமராசருக்கும் அவரது கட்சியினருக்கும் கொள்ளை மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

"பார்த்தீர்களா; பார்த்தீர்களா? இவர்களுக்கு ஆளும் திறமையிருக்கிறதா? சென்னைக்குக் குடிநீரில்லை. சஞ்சீவி ரெட்டியாரை வயப்படுத்தித் தண்ணீர் வாங்கும் திறமையும் இவர்களிடம் இல்லை! ஹிஹி...."—என்று ஏளனம் பேசியிருப்பார்கள். மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலியறுக்க வேண்டும்—என்ற உயர் எண்ணத்தில்!

ஆனால், மூவண்ணக் கொடிக்காரர்களின் முகத்திலே கரியை அப்பிவிட்டு, 'சென்னைக்குக்குடிநீர் தர எப்போதும் ஆந்திர அரசு தயாராக இருக்கிறது'—என்று அறிவித்தார் ஆந்திர அமைச்சர்! காமராசருக்குத் தலை சுற்றியது!

அவருடைய தலைவலி மேலும் அதிகமாயிற்று, அடுத்து வந்த பேச்சால்!

'தென்னாட்டின் மதிப்பு மீண்டும் உயர வேண்டுமானால்—நான் சொல்லக்கூடிய ஒரே வழி சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களும் ஒன்றோடொன்று இணைந்து கைகோர்த்து வேலை செய்ய வேண்டும்!"

—அய்யோ! இதென்ன ஒரு அமைச்சர் பேச்சா? தென்னாடு—வடநாடு பேச்சே கூடாது—என்று கூறிக் கொண்டிருக்கும் போது இந்தத் 'தெலுங்கர்' வந்து தென்னாட்டின் மதிப்பு மீண்டும் உயர வேண்டும்!—என்கிறாரே! குட்டையைக் குழப்புகிறாரே!

அதுமட்டுமா? திராவிடநாடு என்று இந்தக் கழகத்துக்காரர்கள் கூறும் சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் நான்கும் சேர வேண்டுமென்கிறாரே! அதுவும் சும்மா சேரக்கூடாதாம்!

ஒன்றோடொன்று...
இணைந்து...
கை கோர்த்து...

....வேலை செய்ய வேண்டுமாம்! இதென்ன காங்கிரஸ்காரர் பேச்சுத்தானா? அல்லது திராவிடப் பிரிவினை வாரப் பேச்சா?

விட்டாரா; ஆந்திர முதலமைச்சர்? உணவு மண்டலப் பிரச்சினையைத் தொட்டார்! நமது அமைச்சர்கள் அதுபற்றித்தொட்டும் தொடாததுமாக—'வழ வழா' முறையில் மறைத்தும், மழுப்பியும் பேசி வரும் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினார்.

'ஒரிசாவிற்கும், மத்தியப் பிரதேசத்திற்கும் தனித் தனி மண்டலங்கள் இருக்க முடியுமானால், தென்னாட்டைச் சேர்ந்த இரண்டு மாநிலங்களுக்கு மட்டும் தனித் தனி மண்டலங்கள் அமைப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியும்?'

வடக்கில் அப்படி—தெற்கில் இப்படி! வடக்கிற்கு நீதி—தெற்கிற்கு அநீதி—இப்படிப் பேசுவது யார்?

திராவிட முன்னேற்றக் கழகக் காவலரான, நாவலர் நெடுஞ்செழியனா?

இல்லை; இல்லை! காங்கிரஸ் முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியார்தான் பேசுகிறார்; துணிவோடு பேசுகிறார்! 'எங்களுக்கும் தனி உணவு மண்டலம் வை; அதிலென்ன உனக்குக் கஷ்டம்?' என்று அடித்துக் கேட்கிறார்!

டில்லியின் பேச்சுக்கு எதிர் மூச்சு விட்டறியாத காமராசரின் நெஞ்சுத் துடிப்பு ஒரு தடவை நின்றுவிட்டு, மறுபடியும் துடிக்க ஆரம்பிக்கிறது. சஞ்சீவி ரெட்டியாரின் துணிச்சலைக் கண்டு!

'தனித் தனி உணவு மண்டலம் வேண்டும் என்ற சென்னை—ஆந்திர அரசுகளின் கோரிக்கையை டெல்லி நிராகரித்தது துரதிர்ஷ்டவசமானது. நமது குரல் மத்திய ஆட்சி பீடத்திற்கு எட்டாதது வருத்தத்திற்குரியதாகும்!'

காமராசர் இப்பேச்சைக் கேட்டதும், தன்னை தானே கிள்ளிப் பார்த்துக் கொள்ளுகிறார், தான் கேட்பது நனவிலா, கனவிலா—என்றறிய! தன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொள்கிறார், தான் கேட்கும் பேச்சு, தி. மு. க வின் டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் பார்லிமெண்டில் பேசுகிற பேச்சா, சஞ்சீவி ரெட்டியாரின் பேச்சா என்று அறிந்து கொள்ள!

ஆமாம்; காங்கிரஸ் அமைச்சர் தான்—ஆந்திர முதலமைச்சர் தான் பேசுகிறார்! பேசுகிறது அவர் வாயாக இருந்தாலும் ஐயோ, இது தி. மு. க.—கண்ணோட்டம் ஆயிற்றே—என்று அனலில் புழுவெனத் துடிக்கிறார் காமராசர்!

அந்தத் துடிப்புக் குறைவதற்குள் இன்னொரு இடி வருகிறது.

'நம் எச்சரிக்கை டெல்லியின் காதுகளுக்குக் கேட்கவில்லை, ஏனெனில் அது வெகு தூரத்தில் இருக்கிறது!' பேசியது யார்?—என்று கூச்சலிட்டே கேட்க வேண்டும்போல் தோன்றியது காமராசருக்கு! கழகத்தின் கொள்கைகளை எடுத்துக்கூறும் அன்பழகனா—இல்லை—ஆந்திர அமைச்சரா?—என்று உள்ளூர அலறினார் காமராசர்!

டெல்லிக்கு 'எச்சரிக்கை' தருகிறோம்—என்ற வார்த்தையே 'அவர்கள்' வார்த்தையாயிற்றே?

"தென்னாட்டிற்கு எது நல்லது—எது தேவை என்பது ஆந்திரத்திலும், சென்னையிலும் உள்ள எங்களுக்கு நன்றாகத் தெரியும்? எங்களைவிட, தென்னக நலனில் மற்றவர்களுக்கு அதிக அக்கரை இருந்துவிட முடியாது!"

அப்பப்பா!—இது என்ன தாங்கமுடியாத சொல்லீட்டிகளாக இருக்கின்றனவே? பாரத நாட்டின் ஐக்கியம் வேண்டும் எனப் பேச வேண்டிய முதலமைச்சரா, இல்லை—பிரிவினைவாதிகளின் தலைவர் நடராசனா—என்று தெரியவில்லையே?

'உங்களைக் காட்டிலும் எங்களுக்குத்தான் எங்களைப் பற்றித் தெரியும்!'

'தென்னக நலனில் மற்றவர்களுக்கு அதிக அக்கரை இருக்க முடியாது!'

இவையெல்லாம் 'அகில இந்திய ஒற்றுமை' பேசும் காங்கிரசார் வாயினின்று உதிர்கின்ற சொல்லா?—இப்படி எண்ண எண்ண காமராசரின் தலை பாரம் அதிகமாகிறது. ஆந்திர அமைச்சர் கூறியசொற்கள் கூரிய கணைகளென அவர் நெஞ்சில் பாய்ந்தன. ஏதேதோ எண்ணினார்; கடைசியில் காமராசர் முடிவு கட்டினார்! அது இது;

'ஆம்; இந்தக் கழகத்துக்காரர்கள் கேரளாவில் கழகம் வளர்கிறது; ஆந்திராவில் கிளைகள் அதிகமாகின்றன—என்பது உண்மைதான் போலிருக்கிறது! இல்லையென்றால் ஆந்திர முதலமைச்சரே இந்தக்கருத்துக்களைக் கூறிட முடியுமா? ஒருவேளை, அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் ஆந்திரத்து தி. மு. க. வின் ஆதரவாளரோ?'

இதையும் மாற்றுங்கள்!

தமிழ்க் கொலை புரியும் ரயில்வே நிலையங்களிலும் கக்கூசிலும் 'புருஷன்' 'ஸ்திரி'—என எழுதியிருக்கிறார்கள்.

'ஸ்திரி'—'புருஷர்'கள் மாறவேண்டும்—என்று வேண்டுகோள் விடுத்தது தமிழகத்துப் புலவர் குழு! ஏதோ 'அத்தி பூத்ததுபோல்' அந்த வேண்டுகோளை டில்லி அரசினர் ஏற்றுக் கொண்டனர்! ஸ்திரி—புருஷர்கள்: ஆண்—பெண்ணாக மாறியிருக்கிறது. என்றாலும் ஆண் பெண் படங்கள் மாறவில்லை, சில இடங்களில்!

ஆண், வட நாட்டுப் 'புருஷனை'ப் போல் மார்வாடி முண்டாசு கட்டிக் கொண்டிருக்கிறான்! பெண், வட நாட்டு 'ஸ்திரி'யைப்போல முக்காடுடன் மூக்கு பிலாக்கு போட்டுக் கொண்டிருக்கிறாள்!

தமிழ்ச் சொல்லிருந்தால் தமிழ்ப் பண்பாடுள்ள படமும் இருப்பதுதான் நல்லது! சொல்லை மாற்றுவோரே! தயவு செய்து இத்தவறுகளையும் கொஞ்சம் மாற்றுங்கள்!

மனிதர் தம் கொட்டகையா? மாடுகளின் கொட்டிலா?

திரைப்படம் பார்க்கச் செல்வோரின் எரிச்சலைச் சம்பாதித்துக்கொள்வது, திரைப்படக் கொட்டகைகள்! குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள கொட்டகைகள் மாட்டுத் தொழுவங்களைப் போலவே காட்சியளிக்கின்றன. சென்னையைப் போன்ற சில பெரிய நகரங்களில் உள்ள சில கொட்டகைகள் நவீன வசதிகளுடன் இருந்தாலும்கூட பெரும்பான்மையானவை மனிதர் உட்கார்ந்து பார்க்க முடியாதபடிதான் இருக்கின்றன.

400பேர் உட்காருமிடத்திற்கு 500 பேருக்கு டிக்கெட் கொடுத்திருப்பார்கள்! சிலர் நின்றுகொண்டும் நெருக்கியடித்து உட்கார்ந்துகொண்டும், சண்டையிட்டுக்கொண்டுமிருப்பார்கள்!

உட்காருமிடமோ, முன்னிருப்பவர் தலை படத்தை மறைக்கும்படி அமைந்திருக்கும். அவர் தலை ஆடுகிற பக்கமெல்லாம் நாமும் தலையை ஆட்டிக்கொண்டு இருக்கவேண்டும்!

உட்காருமிடத்தில் மூட்டைப் பூச்சித் தொல்லை பொறுக்க முடியாததாயிருக்கும். நல்ல கட்டங்களில் நம் பார்வையை வேறு பக்கம் திருப்பவேண்டிய நிலையும் அடிக்கடி ஏற்படும்.

பகற் காட்சிகளில் தீயடுப்பில் இருந்துகொண்டு படம் பார்ப்பது போன்றே தோன்றும். சட்டை, பனியன் எல்லாம் நனைந்து விடு திரும்பவேண்டும்.

மூன்றுமணி நேரம் கொட்டகையில் அடைந்திருந்துவிட்டு வெளியே வரும்போது சொல்ல முடியாத அசதியும், தலைவலியும் தோன்றும்!

—இதுதான் திரைப்படக் கொட்டகைகள் நமக்குத் தருகின்ற வேதனைப்பரிசு! அதிலும் குறிப்பாக இந்த ஓரிரண்டு மாதங்களில் அப்படிப்பட்ட கொட்டகைகளுக்குள் போகலாம்—என நினைத்தாலே மேற்கூறிய பயங்கள், நம் உடலை ஒரு குலுக்குக் குலுக்குகின்றன. இத்தனைக்கும் மேலாக தோல்வி வரிசையிலேயுள்ள நம் தமிழ்த் திரைப்படங்கள் 'உள்ளே வராதே! வராதே!' — என்று பயமுறுத்துகின்றன!

இத்தகைய பயங்கரங்களின் உறைவிடமான திரைப்படக் கொட்டகைகள் சீர்திருந்தவேண்டும்—சிங்காரச் சோலைக்குச் சென்று வருவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தவேண்டும்—என்பதே நல்லோர் பலரின் பேரவாவாகும்!

அந்த ஆசையும், அவாவும் வெறும் சட்டத்திலேயே இதுவரை இருந்துவந்தது. இப்போது 'அரசாங்க வாயிலாக அந்த நல்லாசை அமுலுக்கு வந்திருக்கிறது!

திரைப்படக் கொட்டகைகள் மக்கள் சிரமமின்றி, சுகாதாரம் கெடாதபடி பார்க்கும் வண்ணம் சீர்திருத்தப்பட வேண்டும்!

—இந்த எச்சரிக்கையோடு, மிக மோசமான நிலையிலுள்ள இரு திரைப்படக் கொட்டகைகளை மூடிட உத்திரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது!

ஆச்சரியப்பட வேண்டாம்! தென்னாட்டிலேயே ஏறத்தாழ பாதிக் கொட்டகைகள் உள்ள தமிழ் நாட்டு அரசினர் அமுல் நடத்திய உத்திரவன்று!

மைசூர் மாநில அரசு இட்ட உத்திரவுதான் நாம் மேலே கண்டது!

இவ்வுத்திரவால் 'சிலபல' கொட்டகைக்காரர்கள் பாதிக்கப்படலாம். என்றாலும், பெரும்பான்மை கொட்டகை முதலாளிகள் இதனால் பாதிக்கப்படுவதற்கு நியாயமில்லை.

காரணம், எத்தகைய படமாக இருந்தாலும் கொட்டகைக்காரர்கள் நஷ்டத்தின் பயங்கரத்தை அனுபவிப்பதில்லை. நஷ்டமில்லாத தொழிலை, இதுவரை, நடத்திவந்த அவர்களுக்கு, தங்கள் கொட்டகைகளைச் சீர்படுத்திக் கொள்வதில் பெருந்துன்பம் தோன்ற நியாயமில்லை. சேர்த்துவைத்த பெரும்பணத்தில் வேண்டுமானால் கொஞ்சம் குறையலாம்!

மைசூர் வரை வந்துள்ள இச்சீர்திருத்த உத்திரவு தமிழ் நாட்டிலும் வரவேண்டும். திரைப்படக் கொட்டகைகள், தேன்மலர் பூத்த பூங்காவின் சுகம் தரவேண்டும்!

இதற்கு அரசாங்கமும் ஏற்கனவே இயற்றியிருக்கின்ற சட்டம்—எனும் ஆயுதத்தைக் கையிலேந்திட வேண்டும்!

மாறன் எழுதி விரைவில் வெளிவர இருக்கின்ற "சகோதரி" படத்தில் பாலாஜி, முத்துராமன், தாம்பரம் லலிதா தோன்றும் ஒரு காட்சி—இது ஒரு ஏவி. எம்.,—குப்பி கர்னடகா கூட்டுத்தயாரிப்பு; டைரக்ஷன் ஏ. பீம்சிங்.

காஞ்சித் தலைவன்

மு. கருணாநிதி அவர்கள் எழுதி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தயாரிப்பதாக வெளிவந்த "காஞ்சித் தலைவன்" நாடக வேலைகள் அவர் உடல்நலக் குறைவு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இப்போது மீண்டும் துரிதமாக வேலைகள் துவங்கப்பட்டுவிட்டன. பல்லவப் பேரரசின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட அதன் கதை வசனத்தை மு. கருணாநிதி அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார். விரைவிலே தமிழகம் இதைக் கண்டுகளிக்கும்!

புரட்சி நடிகர் உடல் நிலை

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இப்போது பூரண உடல் நலம் பெற்றுவிட்டார். முன்போலவே அவர் கால் பழைய வலிவுடன் திகழ்கிறது வருகிற 17, 18 தேதிகளில் சென்னையிலே நடைபெற இருக்கும் மாவட்ட மாநாடுதான் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கலந்துகொள்ளும் முதல் பொது நிகழ்ச்சியாக இருக்கும்!

மாடர்ன் தியேட்டர்சில் 5-படங்கள்.

இப்போது சேலம் மாடர்ன் தியேட்டர்சில் ஐந்து படங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் ஏ. சுப்பராவ் டைரக்ட் செய்யும் 'எங்கள் குல தேவி' முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அடுத்து விட்டலாச்சார்யா டைரக்ஷனில் 'ஷப்னம்' என்ற இந்திப்படம் தமிழில் உருவாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவர் எடுத்த 'ஜெயவீரன்' என்ற படமும் இப்போது 'டப்' செய்யப்பட்டு வருகிறது. அதே நேரம் 'மூன்று மராட்டியர்கள்' என்ற தெலுங்குக் கதையைத் தழுவி அரு. ராமநாதன் திரைக்கதை வசனங்களை அமைத்து வருகிறார். கடைசியாக முன்பு வெற்றி முழக்கமிட்ட 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' இப்போது தெலுங்கு பேசப்போகிறாள். ராஜசுலோசனா கதாநாயகியாக நடிக்கும் இந்தப் படத்தை 'முதலாளியை' தெலுங்காக்கிய கிருஷ்ணா ராவ் டைரக்ட் செய்கிறார்.



தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் புதிய மனையில், மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி. ஆர். சுந்தரம் அவர்களின் உருவப் படத்தை அகில இந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் அஜீத் போஸ் திறந்து வைத்தார்.

(புகைப்படம்: ஆனந்தன்)

சுழல் விளக்கு

மாலுமி

ந. செல்வராசன்; முத்து நாய்க்கன்பட்டி.

(?) தூய தமிழ் பேசுவது தமிழ் வெறி என்று டாக்டர் சுப்பராயன் கூறுகிறாரே....?

தவறு: டாக்டர் சுப்பராயன் அப்படிச் சொல்லவில்லை; அமைச்சர் சுப்பராயன்தான் அப்படிக் குறிப்பிடுகிறார். ஏனெனில் மந்திரிமார் மொழியில் 'ஆனா, ஆவன்னா' அதுதான்!

எஸ். கருணாகரன்; போடி.

(?) சமீபத்தில் நவன் நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி சரியான முடிவெடுக்கவில்லையாமே....?

எப்படி முடியும்?.... 635 பிரதிநிதிகளில் 172 பேர்தான் விவாதத்தில் கலந்துகொண்டார்களாம்; விவாதம் முடிவதற்குள் அதிலேயும் அநேகர் எழுந்து வெளியே சென்றுவிட்டார்களாம்! இவர்களுக்குத் திட்டமேன்? அதற்கென்று விவாதம் ஏன்?

பி. பிரேமாவதி; சிவகிரி.

(?) தெற்கு வளர்கிறது என்பதற்கு எத்தனையோ உண்மைகளை எடுத்துக்காட்டுகிறீர்களே; எனினும் நீங்கள் ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறீர்கள்?

'தெற்கு வளர்கிறது' என்பதற்கான காரணங்களை நாமும் காட்டமுடியும் சகோதரி! ஆனால் அத்தகைய ஆதாரங்களைப் பார்க்கிற நோத்தில் நம் இதயத்தில் வேதனையும் வளர்கிறதே: அதைத் தடுக்க முடியவில்லையே! கீழே டெல்லி சர்க்கார் வெளியிட்ட புள்ளி விபரம் ஒன்றைக் கொடுத்திருக்கிறோம். சென்ற மாதம் வரை இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் திறக்கப்பட்ட 'பாதுகாப்பு இல்லங்'களின் பட்டியல் அது:

பம்பாய்	: 17
உத்திரப் பிரதேசம்	: 13
சென்னை	: 9
கேரளா	: 7
மைசூர்	: 6
ராஜஸ்தான்	: 4
ஆந்திரா	: 3
மேற்கு வங்காளம்	: 2
பீகார்	: 1
ஒரிசா	: 1
டெல்லி	: 1

பார்த்தீர்களா; பம்பாய்க்கும் உத்திரப் பிரதேசத்திற்கும் அடுத்தபடியாக சென்னையிலும். கேரளாவிலும், மைசூரிலும்தான் அதிகமாகத் திறந்திருக்கிறார்கள்; எனினும், 'தெற்கு தேய்கிறது' என்று கூப்பாடு போடுகிறார்களே; இது நீதியா — என்று கேட்கலாம் தேசியத் தோழர்கள்!

ஆனால் மேற்கண்ட 'பாதுகாப்பு இல்லங்'கள் யாருக்காக ஏற்படுத்தப்பட்டவை? ஆலையிலே உழைப்போரின் அயர்வை அகற்றவா? அல்ல; அல்ல! வறுமைக்குப் பலியாகி வாழ்வைக் கருக்கிக்கொண்ட பெண்களுக்காக; ஆமாம்; வழுக்கி விழுந்த சகோதரிகளுக்கு அளிக்கின்ற புகலிடங்களில் தான் சென்னைக்கு மூன்றாவது இடம் கிடைத்திருக்கிறது! இதை பெருமைக்குரிய ஒன்றாகக் கருதமுடியுமா? இதுதான் தெற்கு வளர்கின்ற முறையா?

பி. சீனிவாசன்; உதகை.

(?) சீனா, இந்திய எல்லைப் புறங்களைத் தாக்கும்போலிருக்கிறதே?

தாக்கினால்தான் உலகிற்குத் தெரியும், இந்திய ராணுவத்தின் திறமையும், சீனக் கம்யூனிஸ்டுகளின் நல்லெண்ணமும்!

டி. நல்லசாமி; விஜயபுரம்.

(?) ஏன் குடிசைகள் இப்போது அடிக்கடி தீக்கிரையாகின்றன?

குடிசைகளை நாட்டில் உண்டாக்கிய மாடிவாசிகளின் உல்லாச வாழ்வு விரைவில் தீப்பிடிக்கப் போகிறது — என்பதை சூசகமாக அறிவிக்கின்றது!

கோ. ஆராவமுதன்; சேப்பாக்கம்.

(?) பிறப்பினாலேயே தி. மு. கவில் சேரமுடியா வண்ணம் தடைகள் உளவோ?

எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் தமிழ்க்குடிப் பண்பு கொண்டோரை வரவேற்பது தி. மு. க!

சி. சுந்தரம்; ஏரல்.

(?) இந்தியாவிலேயே ரயில் என்ஜின்கள் தயாராகப் போகின்றனவாமே?

இனி ரயில்களில் கூட்டமே இருக்காது. ரயில் ஓட்டுபவர்களின் வேலைக்கு விண்ணப்பங்களே வராது!

கண்ணன்; ஆத்தூர்.

(?) திராவிடநாட்டு விடுதலையை எப்படிப் பெறுவீர்கள்?

எங்கள் நாட்டு விடுதலை—என்பது எமக்கு மணமாலை சூடவேண்டிய அத்தை மகள். அவள் வேற்றான் — வடநாட்டான்— சிறையில் கிடக்கிறாள். நேர்மையான முறையிலே அவளை அனுப்பிவிடு — என்று கேட்போம். அவன் அதற்கு மறுத்தால் சிறையெடுத்து வருவோம்!

அன்புக்கரசன்; உறந்தை.

(?) காமராசரின் ஆட்சி உங்கள் இயக்கத்தை ஒன்றும் செய்ய முடியாதா?

முடியாது. ஏனெனில் இவர்கள் நம்மருகே இருக்கும் மாநில அரசுகள். அதாவது வெளியில் திரியும் நீர்ப்பாம்புகள். கடும் விஷம் கொண்ட நாகபாம்பு டில்லிக் குகையில் மறைந்து வாழ்கிறது!

டி. கே. மலையன்; சென்னை—17.

(?) தப்பித்தவறி இந்தியாவிலிருந்து யாராவது சந்திர மண்டலம் போக வாய்ப்புக் கிடைத்தால் என்ன நடக்கும்?

இந்த நேரத்தில் என்றால், தான் போய் இறங்கிய 'ராக்கெட்'டை வைத்து 'ஆயுத பூஜை' கொண்டாடிக் கொண்டிருப்பார், அவர்.

ஜெயராமன்; மயிலம்.

(?) 'இந்திய நாடு ஒன்றுதான் அதிகாரங்களைக் குவிக்காமல் பரவலாக்கிக் கொண்டிருக்கிறது' — என்று கூறியிருக்கிறாரே நேரு. அது உண்மையா?

அது உண்மையானால், 'மத்திய அரசினருக்கே இத்தனை அதிகாரங்களா?'.... என்ற நம் குரலுக்கு மதிப்பு வந்திருக்காதே! பாவம், பண்டிதர் இப்படியெல்லாம் கூறுவதன் மூலம் தம்மைத் தாமே முதுகில் தட்டிக் கொடுத்துக் கொள்கிறார்: தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்.

சிந்தனை; கரூர்.

(?) புராதன இலக்கியங்களைப் படித்தால் மனம் விரிவடையும் — என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறாரே?

உண்மைதான். இலக்கியங்களைப் படிக்கும்போது மனிதன் மனிதத் தன்மையடைகிறான். அப்படிப் படிக்கப்பெறுபவை இலக்கியங்களாக இருக்கவேண்டும். புராதன (பழைய) இலக்கியங்களாக இருக்கவேண்டும், ஆனால் புராண இலக்கியங்களாக இருக்கக்கூடாது!

சுந்தரேசன்; கருவலூர்.

(?) வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பல நாட்கள் பட்டினி கிடந்திருக்கிறோம்!' — என்று பேசியிருக்கிறாரே ஒரு அமைச்சர்?

ஆம்; வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பல நாட்கள் பட்டினி கிடந்தோம்! இவர்கள் ஆட்சியில் பனிரெண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பட்டினி கிடக்கிறோம்!

சிதம்பரம்-இடைத் தேர்தல்

★

மாசற்றவர் நாம்; எனினும்
கையில் காசற்ற நிலை!

★

என்றாலும் நம் முன்னால்...

காசைத் தூசென மதிப்போர்—
ஆள், அம்பு பெற்றோர்—
அதிகாரக் கோல் பிடித்தோர்—

எதிர்த்து நிற்கின்றனர்!

★

★ ஆகவேதான் தலைமைக் கழகம் நிதி கேட்டு நீட்டுகிறது, கரத்தை! செப்புக் காசுகள் சேர்த்து ஜனநாயகக் குழந்தையைப் பேணிவளர்க்கப் பாடுபடும் நம் இயக்கம் உங்கள் ஆதரவை — அன்பை—ஆர்வத்தை நன்கொடை மூலமாக எதிர்பார்க்கிறது!

இடையிலே சின்னாட்கள்!
நம்மவர் ஆறுமுகம் வெற்றிபெற
நிதி குவிப்பீர்! செயலாற்ற
வழிவகுப்பீர்!

கரை சேருமா...?

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

வனிதையர் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர்.

"உன் பெயர்?"

"ரசியா"

—கமிஷ்னர் எழுதிக் கொண்டார்.

"உன் பெயர்?" — குனிந்து கொண்டே, கேட்டார் கமிஷ்னர்.

"மோ...."

—அதற்குமேல் வார்த்தைகள் வெளிவரவில்லை.

கமிஷ்னர் நிமிர்ந்தார். பழைய மோகனா! முன்பு ரகு வாங்கிக் கொடுத்த அதே வெள்ளைப் பட்டாடையை அணிந்தவாறு முகத்திலே இரத்த ஓட்டமின்றி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கும் புரிந்துவிட்டது, ரகுதான் அந்தக் கமிஷ்னர் என்பது!

ரகுவுக்கு எதுவுமே ஓடவில்லை. கப்பன் பூங்கா; ஆங்கிலப் படக்காட்சி; வெண்பட்டுப் புடவை; அந்தக் கடிதம்; அதற்குப் பிறகு அவன் ஒழுங்கான மாணவனாக மாறிய நிலைமை — அத்தனையும் அவன் மனத்திரையில் ஒரு விநாடிக்குள் மின்னி மறைந்தன.

"சார்...." — இன்ஸ்பெக்டரது இந்தக் குரல், 'நீங்கள் இந்த உலகத்தில்தான் இருக்கிறீர்கள்" —என்று நினைவுபடுத்துவது போல இருந்தது.

கமிஷ்னர் ரகு ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு திறந்த பேனாவை மூடி வைத்தார்.

இன்ஸ்பெக்டருக்கு ஒரே திகைப்பு!

"சார்! என்ன இது இந்தக் கேஸ்..."

"அவள்மீது தப்பில்லை!"

"இது நானே பிடித்த கேஸ், சார்!"

"ஷட் அப்! இவள் என் மனைவி!"

கமிஷ்னர் ரகு நாற்காலியை விட்டு எழுந்தார்.

மோகனா பதில் ஏதும் பேசாமல் சிபிச் சக்கரவர்த்தியின் மடியிலே விழுந்த புறாவைப் போல அவன் காலிலே விழுந்தாள்.

காங்கிரஸ் : என்னப்பா தி.மு.க. கதர் வாரக் கூட்டத்திற்கு வரவில்லையா?

தி. மு. க : கதர் வாரக் கூட்டமா?......

காங் : அட, இது தெரியாதா ? காந்தி ஜெயந்தி வாரத்தின் பெயரைத்தான் இந்தத்தடவை இப்படி மாற்றி வைத்திருக்கிறோம்.

தி. மு. க : அடுத்த தடவை என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?

காங் : என்னப்பா இதிலெல்லாமா கிண்டல்? கதர் எவ்வளவு புனிதமான தொழில் தெரியுமா? அதனால் எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் பிழைக்கிறார்கள் தெரியுமா?

தி. மு. க : அதோடு அந்தக் 'கதரை' யார் வாங்குகிறார்கள்? எத்தனை விலை கொடுத்து வாங்குகிறார்கள் — என்பதும் தெரியும் நண்பா !

காங் : என்ன புதிர் போடுகிறாய்?

தி. மு. க : புதிரல்ல; நாட்டு மக்கள் புரிந்து கொண்ட சேதி. பெரிய பணக்காரர்கள்தான் பெரும்பாலும் கதர் வாங்குகிறார்கள்......

ஆகின்றனா-என்பதை உங்கள் செயல் காட்டிவிடுகிறதே?

காங் : நீ ஆயிரம் கூறு. கதரின் மேன்மை சொல்லித் தெரிவதில்லை. அது ஏழை மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். நாட்டை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா தந்த ஒப்பற்ற ஆயுதம் ! கைராட்டை ஆயுதம் ! அது தரும் கதர் சோபிதம் தருவது! இன்னும் கதர்.... கதர்....கதர்....

தி. மு. க : பதறாதே நண்பா ! கதர் என்றால் என்ன ?

காங் :—கதர் என்றால் இதோ நான் போட்டிருக்கும் துணி !

தி. மு. க :... நீ போட்டிருக்கும் கதர் சில வேளைகளில் போலிக் கதராகக்கூட இருக்கலாம். நான் சொல்கிறேன் கேள். கையால் நூற்று கையால்நெய்து அணியும் துணிக்குத் தான் கதர்—என்று பெயர்.

காங் : ஆமாம் ! ஆமாம் !

தி. மு. க : அப்படியானால் இன்றைக்குக் கிடைக்கிற கதர் கையால் நூற்றுக் கையால் நெய்கிறார்கள் என்று நினைக்கிறாயா ?

காங் : சந்தேகமென்ன ?

காங்கிரசின் விளம்பரச் சாவடியா? கதர் விற்கும் துணிக்கடையா?

காங் : உனக்கு இந்த அரசியல் கண்ணோட்டம் ஆகாதப்பா.

தி. மு. க : யாருக்கு அரசியல் கண்ணோட்டம்? கொஞ்சம் கிராமப்பகுதியில் சென்று பார். 'கதர் உற்பத்தி நிலைய'ங்களை அவர்கள் என்ன பெயர் சொல்லி அழைக்கிறார்கள் என்பதை !

காங் : என்ன பெயர்.......?

தி. மு. க : 'காங்கிரஸ் கடை'— என்றுதான் அழைப்பார்கள். காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சி. கதர் நிலையம் அரசியல் கலவாது இருப்பது — என்பதையே அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே!

காங் : இது யார் குற்றம்?

தி. மு. க : உங்கள் குற்றம். அவ்வப்போது சந்தேகங்களை ஐயம், திரிபுகளை நீக்கி வந்தால் இந்த நிலை வருமா ? அதோடு, கதர் நிலையங்களில் நாட்டப் பெறும் கொடி என்ன ?

காங் : — ... கதர்க் கொடி! கை ராட்டைக் கொடி !

தி. மு. க :— காங்கிரசின் அரசியற் கட்சிக் கொடி என்ன ?

காங் ; — .... கதர்க்கொடி ! கை ராட்டைக் கொடி'!

தி. மு. க :—மக்கள் கூறுவதிலே என்ன தவறு ? நீங்கள் வாயிலே மறுத்துக் கூறி வந்தாலும், கதர்க் கடைகள் காங்கிரசின் விளம்பரச் சாவடி

தி. மு. க : கையால் பஞ்சைத் தொட்டு நூற்கும் கை ராட்டைக்கும், தூரத்திலிருந்து நூற்பதை மேற்பார்வையிடும் மில் நூற்புக்கும் என்ன வேற்றுமை?

காங்: கைராட்டையில் நூலைத் தொட்டு நூற்கிறாள். மில்லில் அது இல்லை. ஆகவே மில் கதர் தத்துவத்திற்கு அடங்காது.

தி. மு. க: கையால் தொட்டு நூற்காதது கதர் அல்ல என்று கூறும் நண்பனே! மில்லின் ஒரு சிறு பகுதியும் — கையால் தொட்டு நூற்காததுமான அம்பர் ராட்டையில் தயாராகும் துணியை என்னவென்று கூறுவாய்?

காங்: .... அது ... அம்பர் துணி!

தி. மு. க: அப்படியானால் அது கதர் அல்லவே?

காங்: அப்படி அர்த்தமில்லை... அது....அது.

தி. மு. க: அது போகட்டும். குறைவான விலையடக்கமுள்ள அம்பர் நூலைக் கலந்துதான் இப்போது கதர் விற்பனை செய்கிறார்கள்; கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள் — என்பது உனக்குத் தெரியுமா?

காங்: இது அபாண்டம்; பொய்!

தி. மு. க: நீ சொல்லலாம் நண்பனே! ஆனல் நடப்பது இதுதான்!

காங்: நீ சொல்வதை நம்பவே முடியாது. நீ என்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறாய், கதர் வெறும் துணியென்று! கதர், துணியல்ல! ஒரு தத்துவம்! அப்பழுக்கற்ற தத்துவம்!

தி. மு. க: தத்துவமாக இருந்தாலும் அதன்படி நீங்கள் நடக்கிறீர்களா ? கதரின் முதல் குறிக்கோளே, 'உனக்குத் தேவையான துணியை நீயே நூற்று, நெய்து கொள்ளவேண்டும்!' —என்பது! அதன்படி உங்களில் எத்தனை பேர் நீங்களே உங்கள் துணியை நூற்று நெய்து கொள்கிறீர்கள்?

காங் : ......

தி. மு. க : ஏன் விழிக்கிறாய் நண்பனே? இன்னும் சொல்லப் போனால் ஒருவன் ஒரு நாளைக்கு அரைமணி நேரம் தக்ளியால் நூற்று, நெய்தால் போதும், ஆண்டு பூராவிற்கும் தேவையான துணி கிடைத்துவிடும்—என்றால், தக்ளி இருக்கும்போது கைராட்டை ஏன்? மூங்கில் ராட்டை ஏன்? மகன் ராட்டை ஏன்? அம்பர் ராட்டை ஏன்?

காங் : அம்பர் ராட்டை ஒரு விஞ்ஞான முன்னேற்றம் தானே! 10 ராட்டைகள் ஒரு கிராமத்தின் துணித் தேவையைப் பூர்த்தி செய்யும்போது அந்த ராட்டை அவசியம் தான்!

தி. மு. க : உன் கருத்துப்படியே வருவோம்! 10 அம்பர் ராட்டைகள் கிராமத்தின் தேவையைப் பூர்த்தி செய்வது சரி யென்றால், ஒரு நகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு பொதுவுடமை மில் இருப்பதில் தவறில்லையே?

காங் : நீ தவறான வாதத்திற்கு என்னை இழுத்துச் செல்கிறாய். மகாத்மா காந்தியடிகளின் வரப்பிரசாதம் கதர். அதை நாங்கள் கைவிட மாட்டோம்.

தி. மு. க : கைவிடவில்லை நண்பனே! மெதுவாகக் கை கழுவிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் சொன்ன சுய தேவைப் பூர்த்திப் பாதையிலா கதர் இன்று செல்கிறது? மூன்றரையணா கமிஷன் தருகிறோம் என ஆசைகாட்டி அழைத்து வியாபாரம் செய்ய வேண்டும் என்று காந்தியார் கூறினார்?

காங் : ....

தி. மு. க : ஏன் பேசாதிருக்கிறாய் நண்பனே! 'காந்திபிறந்த வாரத்தில் கமிஷன் மூன்றரையணாவுக்கு ஐந்தணா தருகிறோம்'—என்று ஏதோ 'சில்லரை' ஆசை காட்டி அழைப்பது கதர் தத்துவத்தின் மகிமையையா காட்டுகிறது?

காங் ; ....

தி. மு. க ; இத்தனை 'விளம்பர'ங்கள், ஆர்ப்பாட்டங்கள், நிறுவனங்கள், அதிகாரம், ஆட்சி. பீடம் இருந்தும் தமிழ் நாட்டில் விற்பனையாகாத — விலை போகாத கதர் 4,00,00,000 ரூபாயுக்குத் தேங்கிக் கிடக்கிறது. இது கதர் தத்துவம் வாழ்கிறது என்று காட்டுகிறது? நண்பனே! ஏன் திரும்புகிறாய்? நில்; நண்பா, எங்கே ஓடுகிறாய்?

என்ன தவம் செய்தோம்?

நமது தலைமுறையில் ஒரு மாபெரும் பேரறிஞர் வாழ்ந்து வருகிறார். அவர் பேசுகின்ற பேச்செல்லாம் வரலாறு! உதிர்க்கின்ற சொற்களெல்லாம் அறிஞர் பெருமக்கள் வியக்கின்ற உண்மைகள்!

அவர் வரலாற்றாசிரியர் மட்டுமல்ல; நல்ல வாதமிடுபவர் கூட! அவர் வாதங்கள் சாதாரண அறிவுடையவர்கள் புரிந்துகொள்ள முடியாது! திணறிப் போவார்கள்; திக்குமுக்காடிப் போவார்கள்!

அவர் நம் தலைமுறையில் வாழ்வதற்கு நாம் 'புண்ணியம்' 'தவம்'—எல்லாம் செய்திருக்கவேண்டும்!

இத்தனை புகழ் பெற்ற அவர் யார் தெரியுமா?

கனம். கக்கன் அவர்கள்!

இவருடைய வரலாற்று உண்மைகள் திகைப்பை அளிக்கக்கூடியவை! அவைகளை வரலாற்று உண்மைகள்—என்று கூறுவதை விட வரலாற்று வெடிகள் என்று கூறலாம்!

முன்பொரு தடவை திருச்சியில் இவர் வரலாற்றைப் பற்றி விரிவுரையாற்றினர்.

* பிரஞ்சு நாட்டில் ஜார் மன்னனைக் கொன்றார்கள்.

பிரஞ்சு நாட்டில் ஜார் மன்னனா?—என்று ஆச்சரியப்படாதீர்கள்! ஆச்சரியப் படக் கூடாது! காரணம் வரலாற்றுப் பேராசிரியர் கூற்று.

* நெய்வேலியில் அணை கட்டுகிறார்கள்.

— என்று அதே கூட்டத்தில் பூமி நூலைப்பற்றிப் பேசினார். மக்கள் திகைத்தனர்; சிரித்தனர்! நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கமா — அணைக்கட்டா — என்று! அவர்கள் அப்படிச் சிரித்திருக்கக் கூடாது. பெரும் பூமி நூல் ஆசிரியரை அவமானப்படுத்தியிருக்கக் கூடாது!

அண்மையிலும்கூட ஒரு செய்தி கூறினார், சென்னையில் காந்திஜெயந்தி விழாவில்! கூடியிருந்தோர் திணறினார்கள், அந்தச் செய்தியை ஜீரணிக்க முடியாமல்!

'சமீபத்தில் ரஷ்யப் பிரதம மந்திரி ஐசனோவர், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டை சந்தித்தார்!'

—இதுதான் அவர் கூறிய செய்தி! இறந்துவிட்ட ரூஸ்வெல்ட் எப்படிப் பிழைத்தார்? எப்படி ஐசனோவரிடம் பேசினார் — என்றெல்லாம் குறுநகை பூக்க, குறும்பாக அவரைக் கேட்டு விடாதீர்கள்! ஏனெனில்,

அவர் ஓர் அமைச்சர் !
அவர் ஒரு பேரறிஞர்!

பாண்டிய நாட்டுப் பழம்பதி யாகி
வேண்டிய புகழுடன் விளங்கும் மதுரையில்
முன்னேற்றக் கழகம் முறையுடன் கண்ட
தன்னே ரில்லாத் தமிழராம் முத்து;
அமைப்பு வழிகளில் ஆர்வம் மிகுந்தவர்;
இமைப்பொழு தேனும் இயக்கப் பணிக்கே
அர்ப்பணித் துழைக்கும் அயர்விலாத் தொண்டர்;
பற்பல ஊரிலும் பலநூறு கிளைகள்
தோற்று வித்தவர்; தொகைமிகப் பகைவர்
சீற்றங் கொளினும் சிரித்தே கொல்பவர்;
அச்சந் தவிர்த்தவர்! அந்தத் தோழரின்
இச்சைக் கிணங்க இந்தத் திங்களில்
தோன்றி இயக்கச் சொற்பொழி வாற்றிட
மூன்று நாட்கள் முடுக்கினார் பயணம்
கருணா நிதியெனுங் கலைஞர்! அவருடன்
வருநாள் திராவிடம் வாங்க காமாட்சி,
உந்து வண்டியில் குந்திச் செல்லவும்,
பந்திக்கு முந்தவும் காந்தியும் நானும்!

மதுரைமா வட்டம் வறண்ட தென்றுதான்
இதுவரை எண்ணி இருந்தேன்! ஆனால்,
சின்னம னூரைச் சேர்ந்த பின்னரே
என்ன தவறென உணர இயன்றது!
கழகங் காக்குங் கட்டிளங் காளையர்,
பழையநாள் மன்னர் பவனியை ஒத்த
ஊர்வலம் ஒன்றை ஒழுங்குடன் நடத்திப்
பார்வை விருந்து படைத்தனர்! ஊரே
விழாக்கோ லத்தில் விளங்கிய பான்மை
விழியுடை யோரெலாம் வியந்து கண்டனர்!
மாபெருங் கூட்டம்; மாநாடு போல
மாபெரும் மேடை; மாலைகள், கைத்தறி
ஆடைகள் நிறைந்தன ஆங்கொரு மலைபோல்!
மேடையில் முழங்கினர் விடுதலை வீரர்!
இரவு ஒன்பது ஏகிய பின்னர்
விரைவில் செல்லும் வண்டியை விரட்டிக்
கோம்பை அடைந்தோம்! கூட்டமா அது!!
தேம்பிடுந் திராவிடர் தீமையை நோக்கிப்
படைதனை நடத்தித் தடைதனை உடைக்குந்
திடமுடன் கூடிய சேனைபோல் தோன்றும்!
ஆளுந் தகையுடன் அரியணை ஏறி
மாளும் நிலைக்கு மாறிய கட்சியார்
தங்கள் இடத்தில் பங்கு பெற்றிட
எங்ஙனம் விடுவர் ஏனைய கட்சியை?
சென்னையில் என்னென்ன சின்னத் தனமெலாம்
இன்னமும் செய்கிறார் என்பதுங் கண்டோம்!
கோம்பையில் நமது கொள்கையைச் சொல்வோர்
தாம்புரிந் திட்ட தரமிகு பணியால்
ஊர்தனை ஆளும் உரிமை பெற்றனர்!
வீரர்தம் முதுகில் வேலினைப் பாய்ச்சி,
ஆட்சி மன்றம் அடியோ டழித்தனர்
மாட்சிமை தங்கிய(!) மக்களின் காவலர்!
அறுநூ றுயிரம் பெறுமான முள்ள
பெரியதோர் வீட்டின் உரிமை யாளரே
கமாலெனுந் தோழர், கழக உறுப்பினர்,
அமைதியாய் ஆண்ட அவ்வூர்த் தலைவர்!
மக்க ளாட்சியை வதைத்தவர் கொடுமையை
மிக்க நயமுடன் விளக்கினர் நமது
சொல்லில் வல்லார்! தொல்லை உணர்ந்தோர்
எல்லையில் லாத நிம்மதி எய்தினர்.
வரவர நாம்பெறும் உரமிகு நிலைமையை
இரவெலாம் எண்ணி இறும்பூ தடைந்தோம்........

ஏலம் விளையும் எழில்மிகு மலைகள்
காலைக் கதிரால் கவினுடன் விளங்கத் —
தஞ்சையை மிஞ்சும் நன்செய்க் கழனிகள்
பஞ்சம் வெல்லும் பாங்குடன் செறிந்த
உத்தம பாளையம், உயர்ந்தநற் கம்பம்,
எத்தனை சிற்றூர்? இவையெலாங் கடந்து
நண்பகல் வேளையில் நண்ணினேம் கூடலூர்!
வெண்மதி நிலவென வெய்யிலை மதித்துக்
கூடலூர் மக்கள் கூடிக் கிடந்தனர்!
ஆடலோ, பாடலோ, நாடகக் காட்சியோ
காண்பதற் கன்று! கழக வீரரைக்
காண்பதற் காகவும், கருத்துகள் கேட்கவும்,
திருவிழா நாளில் திரளுதல் போலக்
கருவிழி மாதர் வருகையாம்! கூட்டம்
முடியும் வரையில் மொய்த்தனர் வண்டுபோல்!
சிக்கித் தவித்துச் சீரழி யாமல்
தக்கது செய்யத் தாமும் விரும்பினர்!

அருகினில் மலைமேல் பெருகிய தேக்கமும்,
அருவியும், மின்விசைக் கருவியும் கண்டோம்;
கேரள நாட்டினர் பேரரு ளாலே
நீர்நிறைந் துள்ள பெரியா றணையிலே!

மாலையிற் கிளம்பி மதுரையை நோக்கி
ஆலைப் புகையென அணுகிடும் போது......
வைகை அணையெனச் சைகை செய்தனர்;
பொய்கை, பூம்பொழில், புதுமைச் சிலைகள்
யாவையுங் கண்டோம்; நீர்தான் இல்லை!!
தேவை யுண்டெனில் திறந்து விடவோ?

இரவு மணிதான் ஏழடிப் பதற்குள்
வரவு நோக்கி வாடிக் கிடந்தனர்
கொள்கை வளர்க்கும் குமாரம் நகரிலே
கொள்கை விளக்கும் கூட்டம் கேட்டிட!
சென்று பேசவும் சிந்தை குளிர்ந்தனர்!
வென்று பகைதனை வீழ்த்தத் துடித்தனர்!
என்றுங் காணா எழுச்சி பெற்றனர்!
இன்றுதான் உணர்ந்தோம் எம்நிலை என்றனர்!

மறுநாள் மாலை மதுரையைச் சுற்றி
வறுமையின் உருவாய் வளைந்து கிடக்கும்
முகவைமா வட்ட முகத்திலோர் திலகமாய்த்
திகழும் சிற்றூர் திருப்பூ வனத்தில்........
மாற்றார் நம்மைத் தூற்றியும் திரித்தும்
ஆற்றிடும் பேச்சுக்(கு) ஆணித் திறமாய்
ஆதா ரத்துடன், வாதத் துணிவுடன்,
நீதி பிறழா, நெறிமுறை மாறாக்,
கண்ணியங் குறையாக், கருத்துகள் மிளிரும்
புண்படா உரைகள் பண்புடன் கூறினர்
கழகங் காக்கும் கடமையில் வாழ்வோர்!

உலகமே இன்று, "ஒன்றுமே இன்றி
இத்தனை இளைஞர் இவர்களின் பின்னே
எத்தனை விரைவாய் இணைந்தனர்; இனிமேல்
இப்படை தோற்கில் எப்படை வெல்லும்?
கப்பிய இருளைக் கதிர்போற் கொல்லும்!"
என்று வாழ்த்திடும் இன்மொழி தனையே
நன்று கண்டோம் நானும் நிதியுமே!

[சென்ற கிழமை 1, 2, 3 தேதிகளில் மதுரை மாவட்டத்தில் ஆசிரியர் மு. க. சுற்றுப் பயணம் செய்ததை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கவிதை.]

இரண்டு சிறந்த சரித்திர நாவல்கள்!

ஈழத்தின் கதை

(கே. வி. எஸ். வாஸ் எம். ஏ.)

ஈழ நாட்டின் வரலாற்றைத் தொடர்ந்தகதையாக விரிவாக—விளக்கமாகத் தருகிறார் இலங்கை "வீரகேசரி" பத்திரிகை ஆசிரியர். இலங்கையைப் பற்றிய எல்லா விபரமும் தெரிந்து கொள்ள உதவும் நூல்.

விலை ரூ. 4—00.

பத்தாயிரம் பொன் பரிசு

(கோவி. மணிசேகரன்)

இந்திய மன்னனுக்குப் பிறந்த கிரேக்கப் பேரழகி ஒருத்தி பேரரசு நிறுவ பேராசை கொண்டு செய்யும் சதிகளும், சாகசங்களும் வியப்பின் விளிம்பைத் தொடுவன. ஓவியர் மணியத்தின் எழில் முகப்பு!

விலை ரூ. 2—50.

தேவைக்கு மணியார்டர் செய்க!

கலைஞன் பதிப்பகம்.

தியாகராய நகர், சென்னை | 17.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு